Registered as a News paper பக்கங்கள் 06 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 24 ( 6.4.94 ) புதன்கிழமை ஓசை 97

## 25 வருடங்களில் புற்றுநோயாளர் 2.5 கோடியாக அதிகரிக்கும்

உலகெங்கிலும் இருக்கும் சுமார் 90 இலட்சம் புற்றுநோயாளர்களில் 50 இலட்சம் பேர் மூன்றாம் உலகநாடுகளைச் சேர்ந்தவர்களாவர். எதிர்வரும் 25 வருடகாலப் பகுதியில் இந்த எண்ணிக்கை இரண்டரை கோடியாக அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இலங்கையில் 82 ஆயிரம் வரையிலான புற்றுநோயாளர்கள் அரச மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவற்றில் 60சதவீதமானவை குணப்படுத்தக்கூடியவை. அதிகமான புற்றுநோய் புகைபிடிக்கும் பழக்கத்தினாலேயே ஏற்படுகின்றது. புகைத்தல் பழக்கமானது புகைபிடிக்காதவரின் உடல் நலத்தினையும் பாதிக்கும் ஓர் செயலாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# சமரச முயற்சியில் ஈடுபடும் திட்டம் எதுவும் அரசிடமில்லை

## காய்ச்சலால் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

ஏழுநாள் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டிருந்த 2 வயது குழந்தை ஒன்று யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட போது வெளிநோயாளர் பிரிவிலேயே மரணமடைந்தது.

பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த நிரோசன் என்ற 2 வயது 3 மாதமும் நிரம்பியகுழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக மரணமடைந்தது. (இ)

## ஹெந்தலவில் அடையாள அட்டை

(வடமராட்சி)

திருகோணமலையிலிருந்து புறப்பட்ட 'ஹெந்தல' கப்பல் மாவுடன் நேற்றுக்காலை 7.00 மணியளவில் பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் யாழ்மாவட்ட மாணவர்களது க. பொ. த. சாதாரண பரீட்சை முடிவுகளும் சிவில் உள்ளூராட்சி, புகையிரதத்திணைக்களத்தச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தோல்விக்கான காரணம் உறுப்பினரிடம் அறியப்படும்

### டி. பி. விஜேதுங்கா கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது கட்சி வெற்றிபெற வேண்டுமாயின் தமது முழுமையான சக்தியை கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், தென்மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கான காரணங்கள், அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் தொடர்பாக அங்கத்தவர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## யுத்தம் நோக்கி அரசு திரும்பிவிட்டது

[கொழும்பு]

சிறிலங்கா அரசாங்கத்திற்கு இனப் பிரச்சினைக்கு சமரச முயற்சி மூலம் தீர்வு காணும் நோக்கம் எதுவும் கிடையாது அதன் கவனம் முழுவதும் எதுவித சந்தேகமும் இன்றி யுத்தம் நோக்கித்திருப்பப்பட்டுவிட்டதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில வார இதழான சண்டேரைம்ஸ் தெரிவிக்கின்றது.

இப்பத்திரிகையின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் இதுகுறித்துத் தெரிவிக்கையில், சபாநாயகர் முகமத்தின் யாழ் விஜயம் ஜனாதிபதியினால் நிறுத்தப்பட்டமை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் எந்தச் சமரச முயற்சியிலும் ஈடுபடமாட்டாது என்பதைக் காட்டுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

அரசு இப்போது எந்தச் சந்தேகமுமின்றி யுத்தகளம் நோக்கித் திரும்பிவிட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். சபாநாயகர் முகமதினை யாழ்ப்பாணம்செல்ல வேண்டாமென அவருடனான ஒரு மணிநேரச் சந்திப்பின் போது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கேட்ட போது தாம் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு சாதாரண பிரஜையாக யாழ்ப்பாணம் செல்வேனென ஒரு கட்டத்தில் முகமத் கூறியதாகவும் அப்போது நீங்கள் எமக்குத் தேவை. பதவியை இராஜினாமாச் செய்யாதீர்கள் என ஜனாதிபதி கேட்டுக்கொண்டதாகவும் அச்செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## க. பொ. த. (சா/த) பரீட்சை யாழ். முடிவுகள் வந்தன

க. பொ. த. சாதாரண தரம் (1993 டிசம்பர்) பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

இவை அந்தந்தப் பகுதி கோட்டங்களுக்கு நேற்று மாலையே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கோட்டங்களில் சில பாடசாலைகளே தத்தமது பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டன. இவ்வாறு பெறப்பட்ட பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள் 6-ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளன.

## ஐ. தே. கவிற்கு ஆதரவளிப்பதாக தொண்டமான் உறுதி அளித்தாராம்

### அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தனது கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என அமைச்சர் செள. தொண்டமான் உறுதியளித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

யதாகவும் அநுரா பண்டாரநாயக்க 'திவயின' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அப்பேட்டியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் இடையிலான கருத்து வேற்றுமை தற்போது

அனுப்பிவைத்தோம். இதில் காணப்பட்ட விடயங்களை முழுமையாக ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இரு கட்சிகளுக்கும் இடையிலான கருத்து வேற்றுமைகளை நீக்கவே தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்

ஜனாதிபதி டி. பி விஜேது

## கிளாலி-பூநகரி

## வாக்காளரை மிரட்டி பணியவைத்து தொடர்ந்தும் வாக்கு பெறமுடியாது

### ஐ. தே. க. உறுப்பினர் சிலர் கருத்து

(கொழும்பு)

மிரட்டி அடிபணிய வைத்து வாக்குகளை தொடர்ந்தும் பெறமுடியாது என்பதை தென்மாகாண சபை தேர்தல் உணர்த்தியுள்ளதுடன் மக்களின் நலன் தொடர்பாக கட்சி நல்ல திட்டங்களை முன் வைக்கவில்லை

மேற்கண்டவாறு தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளதுடன் தனிப்பட்ட காரணங்களை ஒட்டி தமது பெயர்களை வெளியிடவேண்டாம் எனவும் கேட்டுள்ளனர்.

மக்களின் ஆதரவுகளை தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியை நோக்கி வீச

செலவு மற்றும் பொதுச் செலவுகளுக்கு வேட்டு வைத்த அரசாங்கத்தை மக்கள் எப்படி நம்புவர்? இந்நிலையில் எப்படி நாம் மக்கள் மத்தியில் செல்லமுடியும்? கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களை எப்படிக் கேட்க முடியும்?

...யளித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமைச்சர் செள. தொண்டமானைச் சந்தித்து பல மணி நேரம் உரையாடியதாகவும் அப்பொழுது அவர் இவ் உறுதி மொழியைத் தனக்கு வழங்கி...

...இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் இடையிலான கருத்து வேற்றுமை தற்போது சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கென மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் குறித்த முழு விபரங்களையும் டி. பி. விஜேதுங்காவிற்கு விரும்புவதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்த சில கருத்துக்கள் உடனடியாகவே அமைச்சர் தொண்டமானுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தொண்டமானின் விருப்பத்திற்கு இணங்க கடந்த வாரம் தொண்டமானைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இவ் உறுதிமொழியை வழங்கினார் என அநுரா கூறியுள்ளார்.

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல் துறை அறிவித்துள்ளது.

...முன் வைக்கவில்லை என்றும் தமது கட்சியினால் பாதிக்கப்பட்டவர்களே இன்று அதிகமாகக் காணப்படுவதாகவும் ஐ. தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் ஐ. தே. கட்சியின் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டபின் வெரித்தாஸ் வானொலிக்கு...

...முன்னணியை நோக்கி விசுவதால் மக்களின் விருப்பிற்கு எதிராகச் செயற்படாமல் இருப்பதே இன்றைய நிலையில் மிகவும் பொருத்தப்பாடுடையது.

கொலை மிரட்டலுக்கும் பலாத்காரத்திற்கும் மத்தியில் உயர்ந்த வாழ்க்கைச்... முடியும்?

வேறு கட்சிகளைக் குழப்பியமை, கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொண்டமை போன்றவையும் கட்சியை மேலும் பாதிக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# ஐ.தே. கவுடனான உறவை முறித்துக்கொள்ளவேண்டாம்

## தொண்டமானிடம் ஜே. ஆர். கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய கட்சியுடன் கடந்த 17 ஆண்டுகளுக்கும் மேலாகப்பேணிவரும் நல்லுறவை முறிக்க வேண்டாமென முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்தனா இ. தொ. கா தலைவரும் அமைச்சருமான தொண்டமானிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று முன்னாள் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ், அமைச்சர் போல் பெரேரா ஆகியோர் சகிதம் தொண்டமானை நேரில் சந்தித்து ஜே. ஆர் ஜெயவர்த்தனா இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

# சீனாவிடம் நான்கு யுத்தக் கப்பல்கள்

# சிறிலங்கா கடற்படை கொள்வனவு

(கொழும்பு)

சீனாவிடமிருந்துசிறிலங்கா கடற்படைக்கென நான்குயுத்தக்கப்பல்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த சனிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் கைச்சாத்தாகியுள்ளது சிறிலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகரா மற்றும் இலங்கைக்கானசீனத் தூதுவர் ஆகியோர் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

60 மீற்றர் நீளமுடைய ஹைனன் ரக நீர்மூழ்கிகளைத் துரத்தும் பீரங்கிக்கப்பல், அதிவேக ரோந்துப்படகுகள் இரண்டு. தரையிறக்கும் கப்பலொன்றுஎன்பனவே கொள்வனவு செய்யப்படவுள்ள கப்பல்களாகும்.

முன்னதாக கடற்படையின் மூத்த அதிகாரிகள் சிலருடன் கடற்படைத்தளபதிபீகிங் சென்றபோது, அங்கு கடற்படைக்கு தேவையான கப்பல்களை பார்வையிட்டு அவருக்கு திருப்தி ஏற்படுமானால் அங்குள்ள தூதுவர் மூலம் ஒப்பந்தம்கைச்சாத்திடப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் கடற்படைத்தளபதி பீகிங் சென்றிருந்த வேளை இதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக சர்ச்சைகள் ஏற்பட்டது.

நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற தகவல் பீகிங்கில் இருந்த கடற்படைத்தளபதிக்கு எட்டியதும் தொலைபேசி மூலமாக நிதியமைச்சு வட்டாரங்களுக்கும், கடற்படைத்தளபதிக்கு மிடையே சூடான வாக்குவாதங்கள் நடந்தன.

இதற்கான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கை பாதுகாப்பு அமைச்சினால் முறைப்படி விடுக்கப்படவில்லை என்றும் அதனால் நிதி ஒதுக்கீடு செய்வதில் சிரமம் இருக்கிறது என்றும் நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் ஒரு கட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் தான் இவ் விவகாரம் உரியமுறையில் தகுந்த நேரத்தில் தீர்க்கப்படாவிடின் நாடு திரும்பு...

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை மாவட்டத்தில் ஒப்பரேசன் 'ஜனபூமி'

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

'ஜனபூமி' எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் இராணுவ நடவடிக்கை முல்லைத்தீவு மாவட்டத்தின் வடகிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பிரதேசசபை உறுப்பினர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

பேருவளை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் இனம் தெரியாத நபரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

பேருவளை பிரதேச சபையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான உபாலி சந்திர சில்வா என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இவர்மீது நேற்றுமுன்தினம் கொழும்பு காலி வீதியில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# ஒக். 20 - நவ. 20 இடையில் ஜனாதிபதி தேர்தல்

(கொழும்பு)

இவ் வருடம் ஒக்டோபர் மாதம் இருபதாம் திகதிக்கும் நவம்பர் மாதம் இருபதாம் திகதிக்கும்இடையே ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கிடையே தமது கட்சியை பலப்படுத்தி கொள்ளுமாறு சகல உறுப்பினர்களுக்கும்கட்சி அமைப்பாளருக்கும் அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது.

# ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளராக ஹேமா போட்டியிட முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது போட்டியிடுவதற்கு ஹேமா பிரேமதாசா பல முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆதரவாளர்களுடன் ஹேமாபிரேமதாசா பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் தென்மாகாண சபைத் தோல்வியிலிருந்து மீண்டும் கட்சியைத் தன்னால் மட்டுமே கட்டி எழுப்ப முடியுமென பல முக்கியஸ்தர்களுக்கு இவர் தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

# வடக்கு கிழக்கு துண்டிப்பால் முஸ்லிம்களுக்கு பயனில்லை - அஷ்ரப்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைப்பு துண்டிக்கப்படுவதால்முஸ்லிம்களுக்கோ தமிழர்களுக்கோ பயன் எதுவும் இல்லை. தமிழருக்கு எதுவும் கிடைக்காவிட்டால் முஸ்லிம்கள் பயன் பெறுவதற்கு எதுவும் இல்லை.

இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் 11 வதுதேசிய மாநாட்டிலேயே எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இணைப்பு துண்டிக்கப்பட்டால் பேரினவாதிகளின் அத்து மீறிய குடியேற்றங்களைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படும் எனினும் நிபந்தனையற்ற இணைப்புக்கும் நாம் எதிரானவர்கள். நிபந்தனையுடன் கூடிய இணைப்பின் கீழ் முஸ்லிம்...

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தேவை

சகலவிதமான வீடியோ செற், ரேப் செற் வகைகள், மைக், கமறா மற்றும் எலெக்ரோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வனம் இல. 8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-8985)

### புறோயிலர் கோழிக் குஞ்சு விற்பனைக்கு

1 நாள் புறோயிலர் கோழிக்குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப்பண்ணை 1-ம் கட்டை, பிரதான வீதி பருத்தித்துறை- (7940)

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு கனகம் புளியடி சந்தி வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு ஸ்ரீ விஷ்ணு முகவர் பிரதான வீதி, சாவகச்சேரி. (5092)

### மணமகள் தேவை

கனடாவில் தொழில் புரியும் மணமகனும் இந்து சமயத்தைச் சேர்ந்தவரும் ஏழில் செவ்வாயுடைய (பாவம் கூடிய) ஜாதகத்தை உடைய மணமகனுக்கு வயது 32 பெற்றோர் கௌரவமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றார்கள்; தொடர்பு: P. செல்லப்பா, 21/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (7942)

### ஆங்கில மருத்துவம்

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை, மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-9016)

### தவறிவிட்டது

5-4-94 அன்று காலை இணுவிலுக்கும் தாவடிச் சந்திக்கும் இடையில் J பென்டனுடன் தங்கச் சங்கிலி ஒன்று தொலைந்துவிட்டது; கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும், சன்மானம் வழங்கப்படும்; S, சுப்பிரமணியம், 3-ம் கட்டை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (7948)

---

## ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்க அறிவித்தல்

சீட்டுக்குலுக்கல் மூலம் துவிச்சக்கரவண்டி பெறப்பட்டவர்களின் விபரம் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது; இடைக்கப்பெற்றவர்கள் 8. 4. 94-ந் திகதிக்கு முன் தலைமைக்காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

(சி-9017) - பொது முகாமையாளர்

## மார்ச் மாத அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு:- இல. 4591 திரு. பிரசாந்த்
15, சின்னாலன் கட்டை லேன், அரியாலை

2ஆம் பரிசு இல. 4684 திரு. ஆனந்தி
33, பூமகள் வீதி, அரியாலை.

3ஆம் பரிசு:- இல. 5058 G. வத்சலா
மூனாய் றோட், வட்டுக்கோட்டை

புத்தாண்டில் நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆக உங்கள் தேவைகளிற்கு எம்மை நாடுங்கள்

- சகல பொருட்களும் நியாய விலையில்
- சிறந்த தையல் சேவை

## எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: 09-04-94 (சனி), 10-04-94 (ஞாயிறு) ஆகிய தினங்களில் வழமைபோல் விற்பனை நடைபெறும்,
(இ-9018)

---

முருகன் துணை

### சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசாமி கோவில் பரிபாலன சபை அமைப்பதற்கான

## பொதுக் கூட்டம்

அன்புடையீர்,

மேற்படி ஆலய பரிபாலன சபை அமைப்பதற்காக 22-04-1994 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் சாவகச்சேரி பிரதேச செயலர் திரு பு சுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் ஆலய மண்டபத்தில் நடைபெற்று ஆலய பரிபாலன சபை அமைக்கப்படும்.

வழிபடுவோர் சபை அங்கத்தவர்கள் பரிபாலன சபை அறிவித்தல் பிரகாரம் அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்கள், ஆலய உபயகாரர்கள் ஆகியோர் அங்கத்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அங்கத்தவர்களாகச் சேரவிருப்பும் ஆலய நலன் விரும்பிகள் வழிபடுவோர் சபை செயலாளரிடம் ரூபா 25/=ஐ செலுத்தி 17-04-1994ஆம் திகதிக்கு முன் அங்கத்தவராகச் சேரலாம்

தலைவர்,
சங்கத்தானை சன சமூக நிலையம்
(7945)

---

# கல்வியில் மேன்மைக்கு விளையாட்டு அவசியம்

## மெய்வல்லுநர் போட்டியில் உரை

(தொல்புரம்)

பாடசாலையில் கல்வி பயில்வதோடு மாணவர்கள் விளையாட்டு நிகழ்ச்சியிலும் ஈடுபட்டால் தான் கல்வியில் அதிகளவு முன்னேற்றம் அடைய முடியும்; உடலும், உளமும் விருத்தியடைய, கல்வியில் மேன்மையடைய விளையாட்டு அவசியமான தொன்றாகும்;

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டிகளின்போது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு: பு: விக்கினேஸ்வரன் அவர்கள் சிறப்புரை யாற்றுகையில் தெரிவித்தார்:

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் இந்த பாடசாலைக்கு பெரிய அளவிலான மைதானம் இல்லாதிருந்த போதிலும் இந்த மாணவர்களின் விளையாட்டுத் திறனை வெகுவாக பாராட்டவேண்டி யுள்ளது. சிறிய மைதானத்தில் பெரிய அளவிலான விளையாட்டுக்களை திறம்பட செயற்படுத்தி பெற்றார். ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் மத்தியில் சாதனை படைத்த இந்த மாணவ மாணவியரின் விளையாட்டுக்கள் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றன; இந்தப் பாடசாலைக்கு நல்ல ஒரு மைதானம் இல்லாதது பெரும் கவலைக்குரிய விடயம்; எனினும் பெற்றோர்களின் கரங்களில்தான் இதன் ஆக்கமும், வளர்ச்சியும் தங்கியுள்ளது. இதற்கான காணி ஒன்றை பெற்றோர்களால் தெரிவு செய்யுமிடத்து அதனை கல்வித் திணைக்களம்மூலம் பெற்றுத் தருவதற்கு தன்னாலான முயற்சிகளையும் ஒத்துழைப்பையும் நல்குவதாகக் கூறினார்: அங்கு மேலும் தமதுரையில் மேல் வகுப்பு மாணவிகள் செய்து காட்டிய உடற்பயிற்சி விளையாட்டுக்களையும் வெகுவாகப் பாராட்டி இதுபோன்று எதிர்காலத்தில் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் மேலும் வளர அனைத்து பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒருங்கிணைந்து செயல்பட முன்வர வேண்டும் என கேட்டுக் கொண்டார்;

மேற்படி பாடசாலை அதிபர் சி. சிவமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வின்போது உதவிக் கல்விப்பணிப்பாளர் க: தற்பரானந்தன், மூளாய் சிற்றூர் பொறுப்பாளர் இ; கிரன், காரை மத்தி கிராமசேவை அலுவலர் கே; சிவலிங்கம் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியும், போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவியருக்கான பரிசில்களை வழங்கியும் நிகழ்வினை சிறப்பித்தனர், (41)

### மாணவர் அமைப்பு சிரமதானம்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்றும் நாளையும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அன்னை பூபதி நினைவாக சிரமதானம் என்ற திட்டத்தின் கீழ் சிரமதானப் பணிகளை மேற் கொள்ளவுள்ளனர்.

### முற்பணம் செலுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அங்கத்துவ சங்கங்கள் அளிக்கும் ஆதரவிற்கேற்பவே பொருள் விநியோகத்தின் போது முன்னுரிமை அளிக்கப்படும் என சமாசத் தலைவர் கூறியுள்ளார். சமாசத்தின் வளர்ச்சிக்கென ஐந்து லட்சம் ரூபாவை ஒவ்வொரு சங்கமும் முற்பணமாக செலுத்துதல் வேண்டும் எனவும் இத்தகைய சங்கத்திற்கு பொருள் விநியோகம் மேற்கொள்வதற்கு சமாசம் பின்னிற்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார், (22)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-06

1986-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - தொண்டமானாற்றுப் பகுதியில் எமது காவலரண்மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். சின்னக்கோபு** (செற்றில்வடிவேல் சிறிதரன் - வல்வெட்டித்துறை - யாழ்)

**2-லெப். பட்டாபி** (செந்திவடிவேல் சாந்தகுமார்- தோப்புவளவு, நெல்லியடி-யாழ்)

1987-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அன்ரன் / ரஞ்சன்** (அருச்சுனன் ரஞ்சன் - பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி - யாழ்)

1988-ம் ஆண்டு முல்லைத்தீவு - தண்ணீரூற்றுப் பகுதியில் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் ஒன்றின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். கமல்** (கந்தையா கமலேஸ்வரன் - பழம்பாசி, நெடுங்கேணி - மன்னாறு)

1991-ம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈரலிக்குளத்தைச் சேர்ந்த தமிழ் விவசாயி

1992-ம் ஆண்டு மட்டு - புளிச்சங்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**யப்பான் / லூக்காஸ்** (சின்னத்தம்பி குமார்-ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று - அம்பாறை)

**யோகேஸ்வரன்** (தங்கராசா சாந்தலிங்கம் - இருதயபுரம் - மட்டு)


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-9015)

---


புது வருடத்தில் தனது 9ஆம் அகவையில் காலடி வைக்கும்



UNKCO
COMPUTER CENTRE


உங்கள் அடைக்கேவைகளை

உங்கள் ஆடைத்தேவைகளை
விரைவாக பூர்த்தி செய்ய

புதிதாக அமைகிறாள்

# யோகாமணி ஆடை அகம்

(யோகாஸ் ஆடை அகம்)

இன்றைய நாகரிகத்தோடு இணைந்த
இயற்கை எழிலூட்டும் பலவர்ண

★ பட்டாடைகள் ★ ஜவுளித்தினுசுகள்
★ சேட் ஜீன்ஸ் ★ வேட்டி சால்வைகள்

மற்றும்
சிறுவர்களுக்கான ரெடிமேற் அயிட்டங்கள்
புதுப்புது டிசைன்களில் தெரிவு செய்து
நீங்கள் பெற்றிட

மறவாது விரைந்து நாடுங்கள்

## ★ யோகாமணி ஆடை அகம் ★

16B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- இத்தாபனம் 21 - 4 - 1994 தொடக்கம் இல 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

(சி-9019)



எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் ஆரம்பிக்கும்
வகுப்புகளுக்கு மட்டும் கட்டணங்களில் சலுகை தருகிறது

- BASIC Language (Including ADVANCED BASIC)
- PASCAL Language

| | |
|---|---|
| வழமையான கட்டணம் | 1,750/- |
| சலுகைக் கட்டணம் | 1000/- |

- dBASE III PLUS and MS-DOS
- LOTUS 1-2-3 and MS-DoS
- WORD PROCESSING (WORDSTAR PROFESSIONAL Rel-5.5

| | |
|---|---|
| வழமையான கட்டணம் | 2,500 |
| சலுகைக் கட்டணம் | 1,500 |

குறிப்பு: ※ காலை மாலை வகுப்புகள் நடைபெறும்
※ குறிக்கப்பட்ட தொகை மாணவ, மாணவிகளே சேர்க்கப்படுவார்கள்

வார நாள் வகுப்புகள் ஆரம்பம்: 15-04-94

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்: 16-04-94

Join With Us To Study The Latest Computer Technology

மேலதிக விபரங்கட்கு:
வெலிங்டன் சந்திக்கருகில்,
***37, Clock Tower Road,***
***Jaffna.***

(இ-9020)

# இராணுவ நிர்வாகமே மட்டக்களப்பில் உள்ளது

## அமெரிக்க அதிகாரியிடம் எம். பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் வழமை நிலைக்கு திரும்பியுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் அது சுதந்திரமான சிவில் நிர்வாகமாக காணப்படவில்லை; ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழான சிவில் நிர்வாகமாகவே இது இருக்கிறது என இம்மாவட்ட எம். பி. ஒருவர் அங்கு விஜயம்செய்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின்தெற்காசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவிச் செயலர் ரொபின் ராபெலிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு நான்குநாள் விஜயமொன்றை மேற்கொண்டுவந்த ரொபின்ராபெல் கிழக்குமாகாண நிலவரங்களை அறிவதற்காக மட்டக்களப்பிற்கும் விஜயம் செய்தார். இவர் இப்பகுதி எம். பி. திருமலை, மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் இராணுவ அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த ரபெலிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தின் இன்றைய முக்கிய தேவைகள் மூன்று உள்ளன. புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு என்பனவே அவை. இந்த மூன்று முக்கிய தேவைகளில் ஒன்றையேனும் உள்ளூராட்சி சபைகளினால் செய்ய முடியாது. வீதிகளைப் பராமரிப்பது, வரிகளை அறவிடுவது போன்ற கடமைகளே உள்ளூராட்சி சபைகளின் அதிகார வரம்புக்குள் உட்பட்ட கடமைகளாகும்; எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலின்பின் மக்கள் கையில் நிர்வாகப் பொறுப்பு கிடைக்கும் என்ற நிலை இல்லை.

அண்மைய அசம்பாவிதங்களினால் மாவட்டத்தின் சனத்தொகையில் 90 வீதமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்; எனவே இந்த பாதிப்பிற்கு உள்ளூராட்சி சபைகள் முழுமையான பரிகாரம் காணமாட்டாது;

1992ஆம் ஆண்டு முதல் மனித உரிமை மீறல்கள் படிப்படியாக குறைந்து வந்துள்ள போதிலும் கடந்த டிசம்பரில் மீண்டும் இடையிடையே தலைதூக்கியுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் தலைதூக்கியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ. தே. கவின் தோல்விக்கு காரணம் அது நிறுத்திய வேட்பாளர்களே - அனுரா

(கொழும்பு).

தென்மாகாணசபை தேர்தலில் ஐ தே க தோல்வியடைந்தமைக்கு அக்கட்சி நிறுத்திய வேட்பாளரின் பலவீனமே காரணம் என உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார். அதன் விபரம் வருமாறு:

கேள்வி; தென் மாகாண சபை தேர்தல் முடிவு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில்; தென் மாகாண சபை தேர்தல் முடிவுகள் அடிப்படையில் கடந்த தேர்தல் முடிவைப் போன்றதே கடந்த வருடம் மக்கள் கூட்டணியும் டி யூ என் எப். உம் ஐ தே கவை விட்டு கூடுதல் வாக்குகளைப் பெற்றன சிறுபான்மை வாக்குகள் மக்கள் கூட்டணிக்கே சென்றன.

கேள்வி: கடந்த வருடம் டி-யூ-என்-எப் பெற்ற வாக்குகளை இம்முறை ஐ.தே.க. பெற தவறிவிட்டது. ஐ. தே. க- பிரசாரம் வலுவில்லாமல் இருந்தமைக்கு இது காரணமா?

பதில்: டி-யூ என். எப்வாக்குகள் ஐ தே.க.வினுடைய தல்ல- அவை சுதந்திரக்கட்சியினதும் ஜே- வி- பி- யினதும் கலவையான வாக்குகளே அவை ஐ- தே- க- விற்கு வர மாட்டாது.

கேள்வி: ஐ-தே-க சிறுபான்மையினரின்வாக்குகளை ஏன் பெற்றுக் கொள்ளவில்லை?

பதில்: (சில நிமிட யோசனையின்பின்)என்னிடம் அந்த கேள்வியை கேட்காதீர்கள்- நாம் சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெற வேண்டும்- [சுமார் 90 வீதமான முஸ்லிம்கள் ஐ-தே-க ஆதரவாளர்கள்-

கேள்வி: நீங்கள்சுதந்திரக் கட்சியிலிருந்து ஐ-தே-கவில் இணைந்ததால் ஐ-தே-க எத்தனை வாக்குகளைப் பெற்றது?

பதில்: இதன்காரணமாக ஐ- தே- க ஒரு வாக்கையும் பெறவில்லை- சிறிமாவோ பண்டாரநாயக்கா கூட ஐ- தே- கவில் இணைந்தாலும் சுதந்திரக் கட்சிக்கான வாக்குகள் உடையாது-

கேள்வி; காமினி திஸநாயக்காவும், ரொனி டி மெலும் ஐ-தே-கவில் மீள இணைந்துள்ளதால் தென் பகுதி தேர்தலில் ஏதாவது பலன் கிடைத்ததா?

பதில்: அப்படி ஏதும் குறிப்பிடத் தக்கதாக இல்லை-

கேள்வி; மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரம் குறித்த உங்கள் மதிப்பீடு?

பதில்: அதன் பிரசாரம் பலவீனமானது- சந்திரிகாவைக் காணவே மக்கள் வெள்ளமாக வந்தனர். முழு அமைப்பும் நோக்கினால் அது பலவீனமானது. சுதந்திரக்கட்சியை பற்றி எனக்குத் தெரியும்.

கேள்வி: அப்படியானால் மக்கள் கூட்டணி எவ்வாறு வெற்றி பெற்றது?

பதில்: ஐ தே. க வேட்பாளர்கள் பலவீனமானவர்கள். நான் ஆரம்பத்திலேயே இது குறித்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும்கூறியிருந்தேன். நான் தனிப்பட்டவர்களின் கதைகளை கூற விரும்பவில்லை ஆனால் ஐ தே க வேட்பாளர்கள் பலவீனமானவர்கள்;

கேள்வி: அமரசிறி தொடங்கொட வெற்றி பெற்றதற்காக அவர் உங்களுக்கு நன்றி கூற வேண்டும் என கூறியிருக்கின்றாரே?

பதில்: ஆம்: அப்படி செய்வது நல்லதே. நம் தோல்விக்காக அந்த இந்த ஆட்கள் மீது குறை கூற முடியாது ஐ தே.க தோல்விக்கு பல முக்கிய குறைபாடுகள் உண்டு;

கேள்வி: அவை என்ன?

பதில்: இவ்வருடம் அரசு பாடசாலை சீருடைகளை வழங்கவில்லை; மதிய உணவு வழங்கவில்லை நாம் தோல்வியுற்றது நல்லது எமது தவறுகளை நாம் திருத்திக்கொள்ள முடியும், வெற்றியை நோக்கி நகர முடியும்.

கேள்வி: ஐ. தே. க.விற்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையில் தலைமைத்துவத்தில் என்ன வேறுபாட்டைக்காண்கிறீர்கள்?

பதில்: ஐ தே க. பலவழியில் சுதந்திரக்கட்சியை விட சிறந்தது; ஆனால் நான் திருமதி பண்டாரநாயக்காவிற்கு எதிராக எதுவும் கூறவிரும்பவில்லை

கேள்வி: சந்திரிகா குமாரணதுங்காவை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: ஏதுமில்லை

கேள்வி: ஐ தே க; வின் தேர்தல் தோல்வி அது தன் கொள்கைகளை மாற்றவேண்டும் என்பதை காட்டுவதாக உணர்கின்றீர்களா?

பதில்: ஆம், அது உண்மை

கேள்வி: எத்தகைய மாற்றங்கள் தேவை?

பதில்: நான் கூறமுடியாது. உயர்மட்டத்தில் கலந்தாலோசனை செய்து சரியான வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும்

கேள்வி: அமைச்சர் தொண்டமான் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்ளவில்லை ஐ. தே. க தோல்விக்கு இது காரணமாகுமா?

பதில்: நாம் தொண்டமானின் ஆதரவை எல்லா நேரமும் பெற்றிருத்தல்வேண்டும்;

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எமது கட்சியை சேர்ந்த ஒரு அமைச்சர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் முழு ஆதரவு வழங்குவதாக தொண்டமான் எனக்கு உறுதி அளித்தார்.

கேள்வி: நீங்கள் உங்கள் சகோதரியை கெட்ட வார்த்தைகளால் திட்டினீர்களா?

பதில்; அது மிகப் பெரிய பொய் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கூறும் பொய் அவரின் கொள்கைகளை மட்டுமே நான் கண்டித்துள்ளேன்.

கேள்வி: சுதந்திரக் கட்சி உங்களை திரும்பி வருமாறு அழைத்தால் போவீர்களா?

பதில்; அது என்னை அழைத்திருக்கின்றது ஆனால் நான் போகமாட்டேன் உடைகளை மாற்றுவதுபோல் நான் கட்சி மாறமாட்டேன் ஐ தே. க. தோற்றுவிட்ட காரணத்தினால் நான் கட்சி மாறுகிறேன் என்றால் 1977 இல் நான் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறியிருப்பேனே

கேள்வி: தென் மாகாண வெற்றியின் பின் தனது கட்சியின் மோதிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் ஒற்றுமையாகிவிட்டனர் என கூறியுள்ளாரே?

பதில்: இன்னும் அங்கு மோதல்கள் இருக்கிறது எத்தனை சுதந்திரக்கட்சி எம். பிக்கள் தென்மாகாண தேர்தல் பிரசாரத்திற்கு வந்தனர்

கேள்வி: ஜனாதிபதி தேர்தலிற்காக சுதந்திரக்கட்சி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் ஐ. தே. க. விஜேதுங்காவையும் நிறுத்தினால் ஜனாதிபதி தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: கொள்கையின்படி நான் திருமதி பண்டாரநாயக்காவிற்கு எதிராக பேச மாட்டேன் இது நான் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறிய அன்றே முடிவுசெய்துவிட்டேன். அவர் எனக்கு எதிராக பேசுகிறார் நான் அப்படியல்ல ஆனால் நான் அவரின் கொள்கைகளை கண்டிப்பேன்.

கேள்வி: மக்கள் கூட்டணியின் வெற்றிக்கு சந்திரிகாவே காரணம் என பலர் கூறுகின்றனரே?

பதில்: யாராவது வெற்றி பெற்றால் வெற்றியை சுவைக்க பலர் முன்வருவர். தோல்வி என்றால் எவரும் இல்லை அவரிடம் எந்த காந்த சக்தியும் இல்லை. சுதந்திரக் கட்சி மேடையில் ஒரு பெண்ணைக் காண ஆண்களுக்கு விருப்பம் இது இயற்கையானதே.

கேள்வி: ஐ தே கவினுள் அதிகாரப் போட்டி உள்ளதா?

பதில்; இல்லை ஆனால் காமினி ஆதரவாளர்கள் உள்ளனர். ஐ தே. கவில் கோஷ்டிகள் இல்லை; சுதந்திரகட்சியிலேயே உள்ளது.

கேள்வி; ஐ தே கவில்மாற்றம் தேவையா?

பதில்: நான்அதைக்கூறமாட்டேன். ஆனால் பலவீனமான எவரும் இருப்பின் அவர்கள் வெளியேறிவிட வேண்டும்;

கேள்வி: நீங்கள் சுதந்திரக் கட்சியில் இருந்திருந்தால் ஐ தே க. வென்றிருக்கும் என சிலர் நினைக்கின்றனர்.

பதில்: நான் சுதந்திரக் கட்சியில் இருந்த போது சுதந்திரக் கட்சி பல தடவைகளில் ஒருபோதும் வெற்றி பெறவில்லையே;

கேள்வி: தெற்கில் சந்திரிகா வரும்போது ஜயகோஷம் செய்பவர்கள் உங்களைக் கண்டதும் கூக்குரலிட்டு கூச்சலிட்டதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதே?

பதில்: அது பொய் நான் உரையாற்றிய போது மக்கள் கூட்டணி ஆதரவாளர்கள் எனது முன்னைய பழைய உரையொன்றை ஒலிபரப்பினர்; இதையடுத்து ஐ. தே. க. ஆதரவாளர்கள் அவர்களைத் தாக்கினர். அப்போது அவர்கள் ஐ தே க ஆதரவாளர்களை நோக்கி கூக்குரலிட்டனர். என்னை நோக்கி யல்ல; இதுவே சூரியவேவாவில் உண்மையில் நடந்தது;

கேள்வி: மொறவக்கவில் என்ன நடந்தது

பதில்; சுதந்திரக் கட்சியின் சகோதரரும் வேறு மூவரும் எனக்கு கூக்குரலிட்டனர்.

# இனஉரிமைக்காககுரல்கொடுப்பதற்கு யாருக்கும் பயப்படவேண்டியதில்லை

-- பேராசிரியர் அ. துரைராசா

(யாழ்ப்பாணம்)

நிர்வாகி ஒருவர் தமது கடமையை சேவை மனப்பான்மையுடனும் இன, மத, உயர்வு தாழ்வு பேதமின்றி எல்லோரையும் சமமாக மதிப்பவராயும், தமது நிர்வாகத்துக்குட்பட்டவர்கள் தமது பிரச்சினைகளை இலகுவில் அவருடன் தொடர்பு கொண்டு தீர்க்கக்கூடியவராகவும் இருப்பவரே- சிறந்த நிர்வாகியாக இருப்பார்- அவருக்கும் பொதுமக்களிடமும் அன்பும், மதிப்பும் ஆதரவும் கிடைக்கும் பல்கலைக்கழக துறைத்தலைவர், பீடாதிபதி, உப வேந்தர் ஆகிய பதவிகளை வகித்த பொழுது நான் இவற்றினை கருத்திற்கொண்டு செயல்பட்டதினால் பிரச்சினைகளை இலகுவில் தீர்க்க கூடியதாக இருந்தது என உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா யாழ் மாவட்ட நிர்வாக மேம்பாட்டில் பங்கு கொள்ளும் சகல அரச அதிகாரிகளாலும் செயலகத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுஉபசார வைபவத்தில் கூறினார்-

இவ்வைபவத்துக்கு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப திலகநாயகம் தலைமை வகித்தார்- அவர் மேலும் பேசுகையில், ஒவ்வொருவரும் தமது இனத்தின் உரிமைகள் பறிபோகும் போது. அதற்காக குரல் கொடுக்க வேண்டும்- அவ்வாறு குரல் கொடுப்பதற்கு யாருக்கும் பயப்படத் தேவையில்லை! அதற்காக இனவெறியராக மாறக் கூடாது இனத்துக்கான உரிமையைகேட்பதுஇனவெறியாகமாட்டாது அதனை கேட்பதில் எவ்வித தவறும்இல்லை.

இவ்வைபவத்தில் திட்டப் பணிப்பாளர் செ,பத்மநாதன் பிரதேச உள்ளூராட்சி, உதவி ஆணையாளர்சு டிவகலாலா, உடுவில்பிரதேசச் செயலாளர் க. மகாலிங்கம்- உதவி திட்டமிடல் பணிப்பாளர் நா. சிவபாதசுந்தரம். விவசாய விரிவாக்க அலுவலர் த-சிவலோகநாதன். நிர்வாக அலுவலர் க, பஞ்சாட்சரம். யாழ்ப்பாணப் பிரதேசச்செயலாளர் கலாநிதி க; குணராசா ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

# எரிபொருள் வசதிகள் ஆசிரியர்களுக்கு வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் மற்றும் துவிச்சக்கர வண்டி வசதிகள் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்;

...களாகிய ஆசிரியர்களுக்கும் திணைக்களம் துவிச்சக்கர வண்டியை பெற்றுக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும் அவ்வாறு செய்யப்படும் போது வடமராட்சி கிழக்கு, தெற்பளை போன்ற மிகக் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்

# விமான நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படையின் விமானம் ஒன்று கடந்த திங்கள் அதிகாலை 6-30 மணியளவில் பண்டத்தரிப்பு, சுழிபுரம், பொன்னாலை பகுதிகளின் வான்பரப்பில் சுற்றி

சங்கப் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் யாழ்ப்பாணப் பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது: கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஐந்து லீற்றர் மண்ணெய் எரிபொருள் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் துவிச்சக்கர வண்டிகளும் தொகுதி தொகுதியாக பெற்றுக்கொள்ளப்பட்டு கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்படுகிறது. இதுபோன்று யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுவதற்கு பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் திணைக்களத்தில் சேவை செய்யும் ஊழியர்களுக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் துவிச்சக்கர வண்டியை பெற்றுக் கொடுத்துள்ளது. அதுபோல கல்வித் திணைக்களத்தின் கீழ் சேவையாற்றும் ஊழியர் பனி போன்ற மிக்க கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புரம், பொன்னாலை பகுதிகளின் வான்பரப்பில் சுற்றி வட்டமிட்டு மக்கள் குடியிருப்புகளை நோட்டம் இட்டுச் சென்றது. (41)

## மிளகாய்ச் செடிகளில் பனிப்பூச்சி தாக்கம்

(தொல்புரம்)

மிளகாய்ச் செடிகளுக்கு பனிப்பூச்சியின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுபயிர் செய்கையாளர் உட்பட மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதையிட்டு கமநல சேவை நிலையங்களின் ஆலோசனை நடைபெற்றதையடுத்து இந்த பனிப்பூச்சியின் தாக்கத்துக்கு உள்ளான மிளகாய் செடிகளுக்கு லேபேசிட் அல்லது பென்தியோன் கிருமி நாசினி ஒரு அவுன்ஸை கலன் தண்ணீரில் கலந்து தெளிக்குமாறு தொல்புரம் கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார். (41)

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

சிரித்திரன் மாசி, பங்குனி மாத இதழ் வெளிவந்துள்ளது. வழமையான நகைச்சுவை அம்சங்களுடன், மருந்துக்கும் தட்டுப்பாடு மருத்துவத்திற்கும் தட்டுப்பாடு என்ற நிலைக்கண்ணாடி பகுதியும் மகுடி பதில்கள், மெய்கண்டார் மனோரதம் கொழித்தல், பேட்டி, படிப்பு ஒரு கண்ணோட்டம் ஆகிய ஆக்கங்களுடன் கிணற்றுத் தவளை எனும் சிறு கதையும் இதில் பிரசுரமாகியுள்ளது.

# இடம்பெயர்ந்த மாணவர்க்கு யுனிசெப் நிறுவனம் உதவி

## இலவசமாக பாடசாலை உபகரணங்கள்

(தொல்புரம்)

இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு ''யுனிசெப்'' ஸ்தாபனம் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பு செய்யவுள்ளது.

சென்ற வருடத்தைப் போன்று இந்த வருடமும் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளை இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு மேற்படி யுனிசெப் நிறுவனம் இலவசமாக வழங்கவுள்ளது.

இதுபற்றிய மாணவர் விபரங்களை தயாரித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் இடம் பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள 11 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களின் விபரப்பட்டியல் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும். இவ் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் விரைவில் இங்கு வந்து சேரவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (41)

## கண்டெடுப்பு

ஒற்றிசல் கைக்கடிகாரம் ஒன்று செல்வசேகரம் என்பவரால் கஸ்தூரியார் வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

பகுதி தோதலில் ஏதாவது பலன் கிடைத்ததா?

பதில்: அப்படி ஏதும் குறி

பதில்: ஆம், அது உண்மை.

கேள்வி: எத்தகைய மாற்றங்கள் தேவை?

திரக் கட்சியை விட்டு வெளியேறிய அன்றே முடிவுசெய்து விட்டேன். அவர் எனக்கு எதி

சுகாதாரரும் வேறு மூவரும் எனக்கு கூக்குரலிட்டனர்.

# உள்நாட்டுப்போரை அரசு வர்த்தகமயமாக்கியுள்ளது

## - சந்திரிகா குமாரணதுங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசு இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர விரும்பவில்லை. போர் இன்று வர்த்தகமாக மாற்றப்பட்டிருக்கின்றது. ஆயுத கொள்வனவில் லட்சக்கணக்கான டொலர்களைச் சம்பாதிக்கும் நபர்கள் இப்போர் முடிவுக்கு வருவதை விரும்பமாட்டார்கள். இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.

கேள்வி: வடக்கு பிரச்சினை குறித்த உங்கள் பார்வை என்ன?

பதில்: வடபகுதி மக்கள் நீண்டகாலமாக நீடித்து வரும் போரினால் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இப்பகுதி மக்கள் நெருக்குதல்களின் மத்தியில் வாழ்கின்றனர். பேச்சு மூலமான அரசியல் தீர்வு காண்பது அரசின் பொறுப்பாகும்.

காலஞ்சென்றவர்களான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும், பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். ஆனால் இதற்கு அரசு தயாராக இல்லை என்பது தெரிகிறது. ஆயர் கென்னத் பெர்னாண்டோ, சர்வோதய தலைவர் ஏ. ரி ஆரியரட்ண மற்றும் பலரும் யாழ்ப்பாணத்திற்கு சமாதான விஜயத்தை மேற்கொண்டனர். அவர்களின் முயற்சிகளுக்கு சாதகமாக அரசு நடந்து கொள்ளவில்லை. சபாநாயகர் முகமட்டின் அண்மைக்கால முயற்சியும் முறியடிக்கப்பட்டு விட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னதாக அரசு பிரபாகரனுடன் பேசத்தயாராக இருப்பதாகக் கூறினார். இத்தகைய பேச்சுகளுக்கு அடித்தளம் அமைக்கும் நோக்கில் சபாநாயகர் எடுத்த முயற்சிக்கு இப்போது இடையூறு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு இப்பிரச்சினையில் ஒரு உறுதியான கொள்கையுடன் இல்லை என்பதை அறியமுடியும்.

கேள்வி: நீங்கள் முன்பு அளித்த ஒரு பேட்டியில் பாதுகாப்புப்படைகளின் பெருமைக்கு அபகீர்த்தி அளிக்கக் கூடிய வகையில் நீங்கள் அறிக்கை வெளியிட்டதாக பிரதமர் ரணில் குற்றஞ்சாட்டியுள்ளாரே?

பதில்: நான் அப்படி ஏதும் கூறவில்லை. பிரதமர் இதன் மூலம் அரசியல் லாபம் தேட முயல்கிறார்.

## நீரிறைக்கும் இயந்திர விலைகள் நிர்ணயம்

(தெல்லிப்புரம்)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தினால் கொழும்பிலிருந்து கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களுக்கு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதன் பிரகாரம் றொபின் ஈ.வை 20 ரகம் 22 175 ரூபாவாகவும், றொபின் ஈ.வை 15 ரகம் 19,170 ரூபாவாகவும், குபோட்டா ஜே. என்200 ரகம் 21, 975 ரூபாவாகவும் எஸ்பிக்ட் என். ஜே 12 ரகம் 14,000 ரூபாவாகவும் என்ற அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

# அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பொருளாதாரத்திற்கு முட்டுக்கட்டை

## ஐ. தே. கவின் துணைப் பொதுச்செயலர்

(கொழும்பு)

அமைச்சர்களுக்கும் எம்.பிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும் ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் பிரிவினரால் பொது மக்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக ஐ தே க. உதவிச் செயலாளர் சுசில் முனசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரமருக்கும் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு அவசியமானது ஆனால் ஏனையவர்களுக்கு இத்தகைய பாதுகாப்பு வசதிகள் தேவையற்ற ஒன்று இவர்களுக்கான தேவையற்ற பாதுகாப்புகளே நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருக்கிறது.

அமைச்சர்களும் எம். பிகளும் ஆயுதம் தாங்கிய மெய்க்காவலர்களுடன் சென்று வந்ததை தென்பகுதி மக்கள் ஆட்சேபித்ததைத்தாம் கண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## திருமலையில் மீண்டும் சர்வோதய பாடசாலைகள்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சர்வோதய அமைப்பினர் மீண்டும் ஆரம்ப பாடசாலைகளை நடத்த முன்வந்துள்ளனர். இம் மாவட்டத்தைச் சேர்ந்த பின்தங்கிய கிராமங்களான 33 இடங்களில் இப் பாடசாலைகள் இயங்கும் என்று சர்வோதய அமைப்பின் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளர் வேல்முருகு ஜீவராஜ் தெரிவித்துள்ளார்.

# 1995 ஜனவரியில் பாப்பரசர் இலங்கை வரத் திட்டம்

## வத்திக்கான் தூதரகம் அறிக்கை

(கொழும்பு) பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார் என கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகமும் இலங்கை ஆயர்கள் மகாநாடும் அறிவித்துள்ளன.

இறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவினதும் ஆயர்களினதும் அழைப்பின் பேரில் இவ் விஜயத்தை மேற்கொள்ளும் பாப்பரசர் ஜனவரி 20, 21 ஆம் திகதிகளில் இலங்கையில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புனிதராக அதிவண ஜோசப்வாஸ் அடிகளாரை திருநிலைப்படுத்தும் சடங்கையும் பாப்பரசர் தனது இவ் விஜயத்தின்போது நடாத்தி வைப்பார் என வத்திக்கான் தூதரக அறிக்கை தெரிவிக்கின்றது.

## கற்பிட்டி மீனவர்கள் தொழிலுக்குச்செல்ல அச்சம்

(கொழும்பு) புத்தளம் கற்பிட்டிக் கடலில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இப்பகுதி மீனவர்கள் தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர். தற்போதையகாலப் பகுதியில் இப்பகுதி மீன் பிடியில் சுறுசுறுப்பாக இருக்கும் எனினும் இம்முறை இப்பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இப்பகுதி மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க போதிய பாதுகாப்பு தருவதாக கற்பிட்டியில் உள்ள கடற்படை அதிகாரி உறுதியளித்தபோதிலும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல மறுத்து விட்டனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து

## நாடு திரும்பும் அகதிகளுக்கு விசேட சலுகை இல்லை

(கொழும்பு) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்படும் இலங்கை அகதிகள் ஏற்கனவே இங்கு இருக்கும் அகதிகள் பராமரிக்கப்படுவதைப் போலவே பராமரிக்கப்படுவர் என்று இறிலங்கா அரசு கூறியுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் இறிஸ்டி சில்வா இதுதொடர்பாக மேலும் கூறுகையில் வெளிநாட்டிலிருந்து வரும் அகதிகளுக்கு எந்தவிதமான மேலதிக சலுகைகளோ விசேட வசதிகளோ வழங்கப்படமாட்டாது என்றும் இலங்கையர்கள் அனைவரையும் ஒரே மாதிரியாகவே அரசு கருதுகிறது என்றும் தெரிவித்தார்.

வெளிநாடு செல்லும் பணிப்பெண்கள்

## முஸ்லிம் அல்லாதோரிடம் பணம் அறவிடப்படுகிறது

(கொழும்பு) பணிப்பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் முகவர் நிலையங்கள் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பணிப்பெண்களுக்கு ஒரே கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டுமென தொழிற்பயிற்சி அமைச்சர் அபுசாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முஸ்லிம் பணிப்பெண்கள் தற்போது எதுவித கட்டணமும் இன்றி மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்களுக்கு இலவசமான டிக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் முஸ்லிம் அல்லாதவர்களிடம் ஒரு தொகை பணம் அறவிடப்படுகிறது விமான டிக்கெட்டுக்கும் பணம் அறவிடப்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

சொரியாவில் ஒரு சாதாரண தொழிலாளி 1200 டொலர்களை வேதனமாக பெறுகிறார். இலங்கையிலிருந்து 20,000 தொழிலாளர்கள் அங்கு அனுப்பப்படவுள்ளனர். இலங்கையில் வருடாந்தம் மூன்று லட்சம் பேர் வேலையில்லாதோர் பட்டியலில் சேருகின்றனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்

## செப்ரிசீமியாவினால் 3மாதங்களில்65பேர்மரணம்

(யாழ்ப்பாணம்) கடந்த மூன்று மாதங்களில் செப்ரிசீமியா நோயால்யாழ். ஆஸ்பத்திரியில் 65க்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளனர். கடந்த வருடத்தை விட இவ்வருடத்தில் செப்ரிசீமியாவினால் உயிரிழப்பு குறைந்துள்ளபோதும் இரு நாட்களுக்கு ஒன்று என்ற விதத்தில் தற்போது மரணங்கள் சம்பவிக்கின்றன.

செப்ரிசீமியாவினால்பாதிக்கப்பட்டவர்கள் குடாநாட்டில் எப்பகுதியில் இருப்பினும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகின்றனர். செப்ரிசீமியா என்ற இந்நோய் குருதி அழுகல் என்று கூறப்படுகிறது.

## போக்குவரத்துஊழியருக்கு 3 மாதச் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை) இலங்கை போக்குவரத்துச் சபை யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் கடந்த மூன்று மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் இன்று வரை கிடைக்கவில்லை என இச் சபையைச் சேர்ந்த ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

கொழும்பில் செயல்பட்டு வரும் தலைமைச் செயலகத்துடன் பலதடவைகள் கடித மூலம் தொடர்புகள் கொண்டும் இன்று வரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர் (24))

## நிருபணமற்ற குற்றச்சாட்டு எதிராளி விடுதலை

(தென்மராட்சி) கைதடியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த திருமணம் ஆகாத பெண் ஒருவரை காதலித்து கைவிட்டார் என்ற மனுதாரரின் முறைப்பாட்டின்படி சாவகச்சேரி காவல்துறையினர் எதிராளியை மன்றில் முற்படுத்தினர் மன்றானது குறிப்பிட்ட எதிராளி என சந்தேக நபர் மீது நடத்தப்பட்ட விசாரணைகளின் போது குறிப்பிட்ட வாதி தரப்பில் எதிராளி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு எந்த வகையிலும் நிரூபிக்கத் தவறியதால் அவ் எதிராளி எந்த விதத்திலும் தொடர்பில்லை என அவரை உடன் சாவகச்சேரி நீதிமன்று விடுதலை செய்தது. (86)

## சண்டையிட்ட பெண்களிடம் வழக்குச்செலவு அறவீடு

(தென்மராட்சி) மிருசுவில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த சந்தேகநபர் மூவர் அதே இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு அடித்து காயப்படுத்தினர் என்ற மனுதாரரின் குற்றச்சாட்டின்படி பளைக் காவல்துறையினர் சந்தேக நபர்களான எதிராளிகளை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்

நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணைகளின் போது இவ் எதிராளிகளில் 1ம் 2ஆம்எதிராளிகள் பெண்களாவர் இவர்கள் இருவரும் சகோதரிகள் 3-ம் எதிராளி 1ஆம் எதிராளியின் மகன் இவர்கள் மன்றின் விசாரணைகளின் பின்னர் 2ஆம் 3ஆம் எதிராளிகள் இக் குற்றத்துடன் எந்தவித தொடர்பும் இல்லாததால் விடுதலை செய்யப்பட்டனர் 1ஆம் எதிராளியும் மனுதாரரும் பழைய குரோதத்தின் சண்டையில் ஈடுபட்டனர் என தெளிவாக தெரியவந்ததைஅடுத்து இருவரும் மாறி மாறி அடித்து காயப்படுத்தியதால் இருவருக்கும் இழப்பீட்டையோ இழப்பீட்டுத்தொகையோ விதிக்காதுமன்றுவழக்குச் செலவாக தலா இருவரையும் 1000/- ரூபா வீதம் மன்றுக்குச் செலுத்துமாறு தீர்ப்பளித்தது (86)

டி.பி. விஜேதுங்கா தலைமையிலான

## சிலை திறப்பு விழாவில் பங்குபற்ற பிரேமா உறவினர்கள் மறுப்பு

(கொழும்பு) மறைந்தஜனாதிபதிபிரேமதாசாவின் சிலையை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா திறந்து வைக்கும் வைபவத்திற்கு தம்மால் வர முடியாது என பிரேமதாசாவின் உறவினர்கள் மறுத்துள்ளனர்.

பிரேமதாசா கொல்லப்பட்ட முதலாண்டு நினைவு தினமான மே முதலாம் திகதி ஹய்ஸ்லெட்டொப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிரேமதாசாவின் உருவச்சிலை ஜனாதிபதி விஜேதுங்காவினால் திறந்து வைக்கப்படவுள்ளது இதற்கான அழைப்புகள் கடந்த வாரம் அனுப்பப்பட்ட போதே இந்நிகழ்வில் கலந்து கொள்ள பிரேமதாசா குடும்பத்தினர் மறுத்துள்ளனர்.

உருவச்சிலையைபிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவே திறந்து வைக்க வேண்டும் எனவும் அவரே காலஞ்சென்ற பிரேமதாசாவின் உண்மையான விசுவாசி எனவும் பிரேமதாசா குடும்பத்தைச் சேர்ந்த சிலர் கருத்து தெரிவித்தனர்.

## கணித விஞ்ஞான போட்டி

சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்கும் 9ம், 10ம், 11ம் ஆண்டு மாணவர்களுக்கான கணித விஞ்ஞானப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8 மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது

## படப்பிடிப்பாளர் தாக்குதல் விசாரணைக்கு பணிப்பு

(கொழும்பு) பத்திரிகைபடப்பிடிப்பாளர் இருவர் பொலிசாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பூரணமான விசாரணை ஒன்றை நடத்தும்படி பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐலண்ட் மற்றும் லங்காதீப பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த இரு படப்பிடிப்பாளர்கள் இருவர்பொலிசாரால் பொலிஸ் தலைமையலுவலக வளவில் தாக்கப்பட்டது தெரிந்ததே. பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முதல்வருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து பேச்சு நடத்திய நிகழ்ச்சியை பதிவு செய்வதற்காக முயன்றபோதே இவ் இருவரும் பொலிசாரால் தாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமது சட்டபூர்வ கடமைகளை இச் செய்தியாளர் ஆற்றுவதற்கு அலுவலக பொறுப்பதிகாரியான பொலிசார் தடைவிதித்ததாகவும் அரசாங்க உத்தரவின் பேரில் இவர்கள் வெளியே நிறுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை ஒன்றை நடத்தும்படி பொலிஸ்மா அதிபர் பொலிஸ் சுப்பிரின்டன்ட் தர அதிகாரியொருவரைபணித்திருப்பதாக கூறப்படுகிறது.

## உயர்தர மாணவர்க்கு கல்விக் கலந்துரையாடல்

பருத்தித்துறை, கரவெட்டி கல்விக் கோட்டங்களில் இருந்து தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நிலை பற்றிய கலந்துரையாடல்கள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. அப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளுக்கு சிறப்பு வாய்ந்த ஆசிரியர்களால் இக் கலந்துரையாடலின் போது விளக்கமளிக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்குரிய மாணவர்கள் ஹாட்லிக்கல்லூரியிலும், மாணவிகள் பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரியிலும், கரவெட்டிக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திலும் இவர்களுடன் சகல பாடசாலை அதிபர்களையும் கூடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான இக்கலந்துரையாடலின்போது ஊற்று நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளர் திரு. பொ. விக்னேஸ்வரன் கலந்துரையாடலை நெறிப்படுத்துவார். (யோ)

## நோட்டம்

வடமராட்சிப் பகுதிகள்மீது குண்டுவீச்சு விமானங்கள் கடந்த சில தினங்களாக குடியிருப்புக்கள்மீது பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டு வருகின்றன,

இப்பகுதிகள் மீது காலையில் வட்டமிட்டு தாழப் பறந்து நோட்டமிட்டன. கடற்பகுதிகள் மீதும் நோட்டமிட்டு வருகின்றன. உடுப்பிட்டி பகுதிகள்மீது பொம்மர் விமானம் ஒன்று நேற்று முன்தினம் பகல் 11-20 மணியளவில் வட்டமிட்டது.

கடற்பகுதிகளிலும் கடற்படையினரின் விசைப் படகுகளின் ரோந்துச் சேவைகளும் அதிகரித்துள்ளன. (யோ)

## சிறைத்தண்டனை

பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் அதேஇடத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு பனம் மட்டையினால் அடி

# கிழக்கில் தமிழர்கள் மீது

## 8-ம் ஆண்டு நினைவலைகள்!

மான டிக்கெட்டுகளும் வழங் ச்சர் குறிப்பிட்டார்

## 8-ம் ஆண்டு நினைவலைகள்



2-ம் லெப் சின்னக்கோபு
(செந்திவடிவேலு சிறீதரன்)
(வல்வெட்டித்துறை)

தாயின் மடியில் 02-09-1966 | தாயக மீட்பில் 06-04-1986

திதி 08-04-1994

பொங்கிய புலியே யுன் காலிற் - சிங்களம்
புதை குழியானதுவே
மங்கிய மாலையில் ஏவிய குண்டினால் - வீரச்
சாவு அணைத்ததுவே.

தற்போதைய முகவரி:
'பொன்னா வில்லா',
இமையாணன் வடக்கு,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்

(7936)

கல்விக் கோட்ட பிரதிக் கல்வி கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது

### விக்கிரமபாகு ஆஸி பயணம்

(கொழும்பு)

பசுமை இடதுசாரிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன ஆஸ்திரேலியா பயணமாகியுள்ளார். அங்கு அவர் ''இடதுசாரிகளும் தேசிய இயக்கமும்'' என்னும் தலைப்பிலகத்தின் கீழ் முக்கிய உரையொன்றையும் நிகழ்த்துவதற்கு உள்ளார்.

க.பொ.த சாதாரணதர

# கிழக்கில் தமிழர்கள் மீது படையினர் கெடுபிடி அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களின் போது ஐ.தே.க தோல்விகண்ட இடங்களில் ஸ்ரீலங்காப்படையினரும் தேசவிரோதக் குழுக்கள் தோல்விகண்ட இடங்களில் தேசவிரோதிகளும் தமிழ் மக்களை துன்புறுத்தியும் தாக்கியும் வருகின்றனர்.

உள்ளூராட்சி தேர்தல் முடிந்து ஒருமாதமாகி விட்ட பிறகும் தேர்தலையொட்டிய தமிழர்கள் மீதான கெடுபிடிகள் தொடர்கின்றன. சேனை சாவடிகளில் கிராமங்களின் பெயர்களைக் கேட்டு படையினர் தமிழர்களை தாக்குகின்றனர். இதனால் பல கிராம மக்கள் தமது இடங்களிலிருந்து வேறு இடங்களுக்கு செல்ல அச்சமுறுகின்றனர்.

இதேசமயம் மட்டக்களப்பு பகுதிகளில் ஸ்ரீலங்கா படைகளின் தேடுதல், கைது நடவடிக்கைகள் அதிகமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

### வருடாந்த உற்சவம்

கலட்டி ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும். சித்திரை புதுவருடப் பிறப்பன்று தேர்த்திருவிழா நடைபெறும். உற்சவ காலங்களில் மாலை 7 மணி தொடக்கம் பொன் தெய்வேந்திரன் அவர்களால் சமயச் சொற்பொழிவும் நடைபெற இருக்கின்றது.

பாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் அதேஇடத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு பனம் மட்டையினால் அடித்து காயப்படுத்தியுள்ளார் என்ற மனுதாரரின் முறைப்பாட்டின்படி சாவகச்சேரி காவல் துறையினர் எதிராளியை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். இவ்விசாரணையில் இரு தரப்பினரும் பழைய குரோதத்தின் அடிப்படையிலேயே சண்டையில் ஈடுபட்டனர் என தெளிவாக தெரிய வந்ததை அடுத்து மனுதாரப் பெண்ணுக்கு ஒருமாத ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் 500- ரூபா வழக்குச் செலவும் கட்டும்படியும் குறிப்பிட்ட எதிராளி மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக 1000- ரூபாவும் 500- வழக்குச் செலவாகவும் கட்டும்படியும் மன்று தீர்ப்பளித்தது. (86)

## மாணவர்களுக்கு மக்கள் வங்கி புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி தனது 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 1992 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சையில் அதிவிசேட பெறுபேறுகளைப் பெற்ற 33 மாணவ மாணவிகளுக்கு க.பொ.த. உயர்தரக் கல்வியைத் திறம்பட தொடர்வதற்காக இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் ரூபா 750ஐ வழங்கும் புலமைப் பரிசில் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த விவேகானந்தன் சஞ்ஜீவன், தர்மராஜா வினோதன், யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த குணசேகரம் டியூட்டேரோன் ஆகியோர் பயன்பெறவுள்ளனர் என்று மக்கள் வங்கியின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மக்கள் வங்கியின் மகளிர் சேமிப்புக் கணக்கின் கீழ்வரும் அதிர்ஷ்ட இலாப திட்டத்தின் கீழ் தற்போது யாழ் பல்கலைக்கழகவளாகத்தில் செயற்படும் மக்கள் வங்கியின் நவீன சந்தைக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் செல்வி எஸ். செல்வஜெயந்தினி என்பவருக்கு தங்கப்பதக்கமொன்று வழங்கப்படவுள்ளது. இவர் இந்த மாத அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நிர்வாகிகள் தெரிவு

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். பிரதேச செயலாளர் பிரிவின் புதிய நிர்வாகிகள் தெரிவு சங்கப் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ், உப-தலைவர் திரு. நி. ஸ்பென்சர், செயலாளர் திரு மூ. கந்தையா, பொருளாளர் திரு. க. கிருஷ்ணகுமார். (24


உங்கள் தேவைகளுக்கு
முந்திக்கொள்ளுங்கள்!

எம்மிடம்

சிறந்த முறையில் அமைக்கப்பட்ட கண்ணாடி அலுமாரிகள் (SHOW CASE) விற்பனை செய்யப்பட உள்ளன.

மற்றும்

புதுவருட நவநாகரிக புடவைத் தெரிவுகளுக்கு இன்றே விரைந்து நாடுங்கள்

கிருஷிகா ஆடை அகம்
69A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுகுணாஸ் பிடவை மாளிகை
29, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(இ-9012)

சிந்தனைக்கு

ஆற்றிலே கணுக்கால் தண்ணீரிலும் அஞ்சி நடக்க வேண்டும். - தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2021
தபால் பெட்டி எண் 05

## அவதானம் தேவை

ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில் பள்ளிச் சிறுவன் ஒருவன் பரிதாபமான முறையில் பலியானான். இவ்விபத்து எவ்வாறுநடந்தது, எவரில்பிழை, சரி என்பதெல்லாம் ஒரு புறம் இருக்க, ஒரு சிறுவன் பலியாகிவிட்டான் என்பதும் அது ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதும் துயரளிக்கும் உண்மையே.

வடக்கைப் பொறுத்து இன்று பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருப்பது துவிச்சக்கரவண்டியே ஆகும். இதனை ஆண்,பெண் இருபாலாரும் வயது, வேறுபாடு இன்றிப் பயன்படுத்தும் நிலையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக துவிச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கையும் பெருமளவில் கூடியுள்ளது.

இந்நிலையில் பாடசாலை, அலுவலகங்கள் ஆரம்பிக்கும் நேரம், முடியும் நேரம், மதியபோசன இடைவேளை நேரம் என்பனவற்றின் போது வீதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில் வீதிகளும் குன்றும் குழியுமாகக் காணப்படுவதினால் பயணிகள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

இதேசமயம் சந்திகள் ஒடுங்கிய சன நெரிசலான வீதிகள் என்பனவற்றில் வாகனங்களை நிறுத்தி வைத்தல், திருத்த வேலைகள் செய்தல் என்பனவும் வீதிப் போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சல் ஏற்படுத்துபவையாகவே உள்ளன.

இவற்றின் காரணமாக பயணிகள் பல சிரமங்களையும், ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியதொரு அவல நிலையும் ஏற்படுகின்றது. அத்தோடு பயணிகளின் சில நடவடிக்கைகளும் விபத்துக்களும் அவற்றால் ஆபத்தான விளைவுகளும் ஏற்படக்காரணமாக அமைந்து விடுவதுண்டு.

இதில் முக்கியமானது சிறுபிள்ளைகள் அதாவது- துவிச்சக்கரவண்டியின் ஆசனத்தில் - சீற்றில்-இருந்தால் மிதி- பெடல்- எட்டாதவர்கள் சைக்கிள் ஓட்டுவதாகும். சிலவேளை அவர் மேலும் ஒருவரைச் சைக்கிளில் ஏற்றிச் செல்வதும் ஆகும்.

இது ஆபத்தை விலைகொடுத்து வாங்கும் ஒரு செயலாகும். அத்தோடு சிலர் துவிச்சக்கரவண்டியில் செல்லும் போது சமநிலையில்- பலன்ஸ்- இருப்பதும் இல்லை, வீதி ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதும் இல்லை,

# கட்டாய நாடு கடத்தலுக்கு தமிழக அரசியற் கட்சிகள் எதிர்ப்பு

(சென்னை)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டாயமாக நாடுகடத்தப்படுவதற்கு தமிழகத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

சென்னையில் கடந்த 31-ம் திகதியன்று நடந்த தந்தை செல்வா நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஈழத்தமிழ் அகதிகள் கட்டாயமாக திருப்பி அனுப்பப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துக் குரல் எழுப்பியுள்ளனர்.

தமிழகத்திலுள்ள 132 அகதிகள் தங்ககங்களில் இருக்கும் 110000 இலங்கைத்தமிழ் அகதிகளில் 40, 000, பேர் ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டிருப்பது தெரிந்ததே. இவர்கள் அனைவரும் சொந்த விருப்பத்தின் பேரிலேயே நாடு திரும்பியிருப்பதாக மத்திய மாநில அரசுகள் கூறிவருகின்ற போதும் கல்வியுரிமை மறுப்பு, தொழில்வாய்ப்பு மறுப்பு போன்ற இன்னோரன்ன நெருக்குதல்களால் தான் நாடு திரும்புவதாக அகதிகள் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

சென்னை நகரில் தந்தை செல்வா நினைவுக் கூட்டம் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய தி.மு.க தலைவர் மு. கருணாநிதி, தமிழக காங்கிரசின் அதிகாரபூர்வ பேச்சாளர் தி.க. இள்ளிவளவன் கம்யூனிஸ்கட்சியின் தா. பாண்டியன், சட்டத்தரணி எஸ். சி. சந்திரகாசன் ஆகியோர் அகதிகள் கட்டாயமாக நாடு கடத்தப்படுவதை எதிர்த்துக்குரல்கொடுத்தனர்.

காஷ்மீர் விவகாரத்தில்

# தாஜிக்கிஸ்தான் உதவியை பெனாசீர் நாடுகிறார்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் ஏற்பட்டுள்ள சர்ச்சையை தீர்ப்பதற்கு பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ மத்திய ஆசிய குடியரசுகளின் உதவியை நாடியுள்ளார். முன்னாள். சோவியத் யூனியனின் முஸ்லிம் மாநிலங்கள் இப்பிரச்சினையை தீர்க்கதமக்கு உதவ வேண்டுமென பெனாசீர் அங்கு விஜயம் செய்த தாஜிக்கிஸ்தான் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இமாலய பிராந்திய நெருக்கடியை தீர்ப்பதற்கு இந்தியாவுடன் பேச்சு நடத்ததான் தயாராக இருப்பதாக தாஜிக் ஜனாதிபதியிடம் பெனாசீர் கூறினார் காஷ்மீர் மக்களை நசுக்காது அவர்கள் சுயஉரிமை பெற்று வாழ இந்தியா வகை செய்ய வேண்டும் என்பதை மத்திய ஆசிய குடியரசுகள் இந்தியாவுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென பெனாசீர் தாஜிக் ஜனாதிபதியிடம் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு நிலையான ஒருதீர்வைக்காண இந்தியாவுடன் பேச்சுநடத்த விரும்புவதாகக் கூறிய பெனாசீர் இந்தியப்படைகள் இரக்கமற்ற முறையில் மக்களை படுகொலை செய்வதாகவும், பெண்களை மானபங்கப்படுத்தல், கிராமங்களை எரித்து அழித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரிவித்தார்.

இதேசமயம் தாஜிக்கிஸ்தான் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே சமாதானப் பேச்சுக்களை நடத்த ஏற்பாடுசெய்வதாகபெனாசீர் தெரிவித்தார். தாஜிக்கிஸ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு பாகிஸ்தான்ஆதரவளிப்பதாக நிலவும் சந்தேகம்காரணமாக தாஜிக் அரசுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கசப்புணர்வு இருந்து வருவது தெரிந்ததே.

# பாக். அணு ஆயுதத் திட்டம் 1987 இல் அமெரிக்கா அறிந்தது

## முன்னாள் இராணுவத் தளபதி தகவல்

(இஸ்லாமாபாத்)

அணுஆயுத தயாரிப்பிற்கு தேவையான வழிமுறைகளையும் தொழில் நுட்பத்தகவல் அறிவையும் பாகிஸ்தான் 1987இல் பெற்றுவிட்டதாக அந்நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்லம்பெக் கூறியுள்ளார்.

கராச்சியில் நடைபெற்ற பாகிஸ்தான் அணுஆயுத திட்டம் குறித்த கருத்தரங்கில் பேசிய அவர், பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தி திறனை பெற்றுவிட்டது என்ற விடயத்தை இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மூத்த அமெரிக்க அதிகாரி ரிச்சர்ட் பார்லோ 1987இல் வாஷிங்டனுக்கு தெரியப்படுத்திவிட்டார். ஆனால் அச்சமயம் இதனைப்பற்றி எதுவும் பேசாது மௌனமாக இருக்குமாறு என்னிடம் கூறப்பட்டது அதன்பின் நான் பதவியிலிருந்து நீக்கப்பட்டேன்.

அச்சமயத்தில் ஆப்கானிஸ்தானில் சோவியத் குறுக்கீடு இருந்தமையால் அமெரிக்கா எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஜெனரல் அஸ்லம்பெக் மேலும் தெரிவித்தார்.

# பேச்சுக்களில் சுமுகம் ஏற்பட்டால்

# அரபாத் ஜெரிக்கோ திரும்புவார்

# மதுரை பஸ்ஸில் துப்பாக்கி ஆட்கள் கொள்ளை

(சென்னை)

மதுரையிலிருந்து புறப்பட்ட பஸ்ஸொன்றில் பயணம் செய்த சிலர் பயணிகளிடமிருந்து பணம்,மற்றும் நகைகள் கொள்ளையிட்டபின்னர் தப்பியோடியுள்ளனர்.

இவர்களின்செயலுக்குஎதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டபோது நாட்டு வெடிகுண்டுகளை வீசியுள்ளனர் பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடும்போது மறித்த கிராமமக்களை நோக்கி இவர்கள்துப்பாக்கிச்சூடும் நடாத்தியுள்ளனர். இச் சம்பவத்தில் காயமுற்றவர்கள் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி நர்தம் பிட்டி காவல் நிலையம் வழக்கொன்றை பதிவு செய்திருப்பதாகவும், இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டோரைக் கைது செய்ய தனியான பொலிஸ் படை அமைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# தாமரைக்கனி உட்பட பலர் என்னை சபையில் தாக்கினர்

## முன்னாள் அமைச்சர் ஜி. விஸ்வநாதன்

(சென்னை)

சட்டசபையில் சட்டமன்ற உறுப்பினரான தாமரைக்கனி என்னைத் தாக்கினார். இவ்வாறு அ.இ.அ.தி.மு.க விலிருந்து நீக்கப்பட்டு எந்தக் கட்சியையும் சாராதவர் என்று அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள்அமைச்சர் ஜி. விஸ்வநாதன் கூறியுள்ளார்.

நிருபர்கள் மத்தியில் அவர் மேலும் கூறுகையில், கேள்வி நேரம் முடிந்ததும், எங்களை ஒரு குழுவாக செயல்பட அனுமதி கோரி சபாநாயகரிடம் கொடுத்த கடிதம் பற்றியும், முன்னாள் அமைச்சர்களுக்கு முதல் வரிசையில் ஆசனம் ஒதுக்கும் மரபு இருக்கும்போதும், எனக்கும் அழகு திருநாவுக்கரசுக்கும் கடைசி வரிசையில் இடம் கொடுத்தது பற்றியும் சபாநாயகரிடம் கேட்க நான் எழுந்து நின்றேன்.

அப்போது என் வலது புறத்தில் இருந்த டாக்டர் சிறிதரனும், இடது புறத்தில் இருந்த தாமரைக்கனியும் என்னை வார்த்தைகளால் ஏசினர். டாக்டர் சிறிதரன் என் கையை பலமாகப் பிடித்துக்கொண்டு ஏதோ கூறினார்.

இதுபோல கையை மேலே வைக்கும் வேலையை வைத்துக் கொள்ளாதே கையை எடு என்றவுடன் அவர் எடுத்துவிட்டார்.

அதேசமயம் தாமரைக்கனி என் தோள்பட்டையில் ஓங்கி குத்தினார். இந்நேரத்தில் மூன்று வரிசைகள் முன்பு இருந்த கே. முனுசாமியும் ஓடிவந்து என்னை ஏசினார். அவர் மட்டுமன்றி மற்றும் பல உறுப்பினர்கள் என்னைக் கடுமையான வார்த்தைகளால் சாடினர். இது போன்ற மிரட்டல்களுக்கு நான் அஞ்சமாட்டேன் என்றார்.

அருகிலிருந்த முன்னாள் அமைச்சர் அழகு திருநாவுக்கரசு எங்களைத் தெரிவு செய்ததொகுதி மக்களுக்காக நாம் தொடர்ந்து சட்ட சபைக்கு செல்வோம் எனத் தெரிவித்தார்.

# முலாயம் சிங் யாதவ் மீது கொலை முயற்சி

உத்தரப் பிரதேச முதல்வர் முலாயம் சிங்யாதவ் நேற்று படுகொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பியுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் அவர் தமது அலுவலகத்தில் பொதுமக்களை சந்தித்துக் கொண்டிருந்த வேளையில், 21 வயதான தலாம் என்ற இளைஞர் ஒருவர் அவரைக் கத்தியால் குத்த முனைந்தார் என்றும் அப்போது முதல்வரின் மெய்க்காப்பாளர் அவ் இளைஞரை மடக்கிப் பிடித்தனர் என்றும் கூறப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காகவே முதல்வர் முலாயம்சிங்யாதவ் செயற்படுவதாகவும், அதனால் உயர் ஜாதி இந்துக்கள் இவரைக் கொல்ல முயற்சித்ததாகவும் கூறப்படுகிறது.

# கட்சிகள் மாநாடு மண்டேலா நம்பிக்கை

தும் இல்லை,

இந்நிலையில் வீதி விபத்துக்கள் என்பது தவிர்க்க முடியாமல் போய்விடக் கூடும். ஆகையினால் வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதில் பெற்றோர்கள் மற்றும் பயணிகளும் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். சிறுபிள்ளைகள் துவிச்சக்கரவண்டிகளை நெரிசலான நேரங்களில் பாவிப்பதைப் பெருமளவில் கட்டுப்பண்ண பெற்றோர் முயலவேண்டும். சமநிலையில் துவிச்சக்கரவண்டிகளை ஓட்ட முடியாதவர்களும், வயோதிபர்களும் இதனைக் கடைப்பிடித்தால் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

ஆனால் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்பவர்கள் மட்டும் அவதானமாகவும் நிதானமாகவும் பயணிப்பதால் மட்டும் வீதி விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதல்ல. ஏனைய மோட்டார் வாகனங்களை ஓட்டுபவர்களே விபத்துகளை விளைவிப்பவர்களாக உள்ளனர். இவர்கள் இது குறித்து தீவிர கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். துவிச்சக்கரவண்டிப் பயணிகளை விட இவர்களுக்கே பொறுப்பு அதிகம்.

இன்று சிறுபிள்ளைகளை பெற்றோர்கள் துவிச்சக்கரவண்டிகளில் பாடசாலைக்கோ அன்றி வேறு வேலைகளுக்கோ அனுப்புதல் என்பது விருப்பத்தின் பேரில் அல்ல. தவிர்க்க முடியாத காரணத்தினாலே அனுப்புகின்றனர். அந்தளவிற்கு இன்றையபோக்குவரத்து நிலை உள்ளது. இந்நிலையில் சிறுவர்களை முற்றாகவீதிகளில் துவிச்சக்கரவண்டிகளில் அனுப்புவதைத் தவிருங்கள் எனக்கோர முடியாது. ஆகையினால் ஏனைய மோட்டார் வாகனங்களில் வருபவர்கள் மிகவும் கவனமாகவே வாகனங்களை ஓட்டுதல் அவசியமாகும். பாடசாலை நேரங்கள் குறித்து அவர்கள் விழிப்புடன் இருத்தல் அவசியம். விபத்து நடந்து சேதம் ஏற்பட்ட பின்னர் வருந்துவதில் பயனில்லை.

இதேபோன்றே வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்துவதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். வீதி ஓரங்களில் வாகனங்களை வைத்து திருத்த வேலை, ஓட்டு வேலைகள் செய்தல், பயணத்திற்குத் தடையாகவுள்ள நடைபாதை வியாபாரம் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

இவ்வாறான ஒரு நிலையிலேயே வீதிவிபத்துக்களை பெருமளவில் குறைப்பதற்கு உதவக்கூடும். அதாவது வீதிகளில் செல்லும் துவிச்சக்கரவண்டி பயணிகள் மோட்டார் வண்டி ஓட்டுநர்கள் மட்டுமல்ல வீதி ஓரங்களில் தொழிலகங்களை வைத்திருப்பவர்களும் ஒருமித்த கவனம் செலுத்த வேண்டும். அல்லது போனால் வீதி விபத்துக்களும் அதனால் ஏற்படும் துயரங்களும் தொடர்வதைத் தவிர்க்க முடியாது.

# அரபாத் ஜெரிக்கோ திரும்புவார்

(ரியூனிஸ்)

காஸாப் பள்ளத்தாக்கு மற்றும் ஜெரிக்கோ நகரப் பகுதிகளில் பாலத்தீனியருக்கு சுயாட்சி ஏற்படுத்துவது தொடர்பாக இஸ்ரேலிய அரசுக்கும், பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கும்இடையேயான பேச்சுவார்த்தைகள் அட்டவணைப்படி பூர்த்தி செய்யப்பட்டால் மே மாதத்தில் ஜெரிக்கோநகரம் திரும்புவதற்கு பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் திட்டமிட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது.

யாசிர் அரபாத் விரைவில் தமது தாயகம் திரும்புவதற்குத் தயாராகிவருவதாகப் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த அபூ ஓமர் தெரிவித்தார்.

ரியூனிஸில் பாலத்தீனியத் தலைமையலுவலகத்தில் நடைபெற்ற பிரியாவிடை வைபவம் ஒன்றில் யாசிர் அரபாத் தமது சமாதானத் திட்டம் பற்றி அறிவித்தார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்பாட்டை அமுலாக்குவதில் பாலத்தீனியவிடுதலை இயக்கமும், இஸ்ரேல் அரசும் ஈடுபட்டிருப்பதுதெரிந்ததே.

46 பேரைக்கொண்ட சிவில் அதிகாரிகள் குழுவும், முதல் தொகுதி பொலிஸ் சபையும் இந்தவாரத்தில் ஜெரிக்கோவிற்கு அனுப்பிவைக்கப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது

இதேவேளை சிரிய ஜனாதிபதி அல் ஆசாத்தும், எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னிமுபாரக்கைக் கெய்ரோவில் சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளார்.

பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கும், இஸ்ரேலுக்குமிடையிலான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எகிப்து ஆதரவு வழங்கியது தொடர்பாக சிரியா அதிருப்தி தெரிவித்த நிலையில் இச்சந்திப்பு முக்கியமானதாகும்.

சிரிய ஜனாதிபதியின் கெய்ரோ விஜயம் முன்கூட்டியே திட்டமிடப்படாதது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இஸ்ரேலிய இராணுவம் காஸாவிலிருந்து வாபஸ்?

(ஜெருசலேம்)

காஸாப்பகுதியில்1967-ம் ஆண்டுமுதல் நிலைகொண்டிருந்த இஸ்ரேலிய இராணுவம் நேற்று முதல் தனது இயந்திர சாதனங்களை அகற்றி, கட்டடங்களில் இருந்து வெளியேறி இப் பகுதியிலிருந்து முற்றாக திரும்பிவிடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் இஸ்ரேல் பாலத்தீனிய பேச்சுக்களில் முதலாவது கட்ட இணக்கம் இறுதிக் கட்டத்தை நோக்கி நகர்வதாக பி. பி. சி தெரிவித்தது.

முதலாவது தொகுதி பாலத்தீனிய பொலிஸ் பிரிவினர் இன்று காஸாப்பகுதிக்கு வந்து சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதியில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் மீளப்பெறப்படுவதையடுத்து, அதிகார கைமாற்றலுக்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, பாலத்தீனிய பொலிஸ் படையின் மூத்த அதிகாரிகள் சிலர் ஏற்கனவே சென்றிருப்பதாக கூறப்படுகிறது.

காஸா,ஜெரிக்கோபகுதிகளிலிருந்து வெளியேற ஆரம்பித்த 24 மணிநேரத்தில் காஸாவை விட்டும், மூன்று நாட்களுக்குள்ஜெரிக்கோவை விட்டும் முற்றாக வெளியேற இஸ்ரேல் இராணுவம் தயாராகி வருவதாக கூறப்படுகிறது,

## புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சி நிரல்

1994-4-6 புதன் இரவு

8. 01ற்கு -அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''ஈகத்தாய்''

8. 10ற்கு- தாயகப் பாடல்கள்

8 20ற்கு-ஏர்முனை- நிகழ்ச்சியில் ''இஞ்சியைப் பயிரிடுவோம்'' சித்திரம் இடம்பெறும்.

8 30ற்கு - செய்திகள்

8 40ற்கு-நாடகம்- ''மருந்துக்கு''

1994-4-7 வியாழன்காலை

7. 02ற்கு - மாவீர வணக்கம்

7. 15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உயிர் கொடுத்த உத்தமி''

7. 25ற்கு- விடுதலை கீதங்கள்

7. 45ற்கு - செய்திகள்

7. 50ற்கு - பத்திரிகைச் செய்திகள்

7. 55ற்கு - தாயகப் பாடல் என்பன இடம்பெறும்

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் அரசியல் கட்சிகளின் மாநாடு நல்ல பயனைத் தரும் என்று எதிர்பார்ப்பதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

சூலு இன்பாதா கட்சியின் தலைவர் புத்தலேசி இந்த மாநாட்டில் பங்குபற்ற இருப்பதாக அறிவித்திருப்பதற்கும் நெல்சன் மண்டேலா வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதேவேளை சூலு மக்களுக்கான தன்னாட்சி உரிமை இந்தமாநாட்டில் அங்கீகரிக்கப்படாதுவிட்டால் தன்னாட்சி உரிமைக்காக தாம் தொடர்ந்து போராடப் போவதாக புத்தலேசி கூறியுள்ளார்.

# பாதுகாப்புசபை தீர்மானம் வடகொரியா நிராகரிப்பு

(சியோல்)

அணுசக்தி மையங்களை சர்வதேச கண்காணிப்பாளர் சோதனையிடுவதற்கு வட கொரியா அனுமதிக்க வேண்டும் என்று ஐ. நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானத்தை வட கொரியா நிராகரித்துள்ளது.

அமெரிக்காவின் அபிலாசைகளுக்கு ஏற்ப ஐ. நா பாதுகாப்பு சபை தாளம் போடுவதாக வடகொரியா குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை வடகொரியாவிடம் இப்போது இரண்டு அணுகுண்டுகள் இருப்பதாகவும், வடகொரியா இதில் தீவிரமாக ஈடுபட்டால் ஒரு வருடத்தில் பன்னிரண்டு அணுகுண்டுகளை தயாரித்து விடும் எனவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# நேபாளத்தில் அத்துமீறல் இந்தியா ஆராயும்

(டில்லி)

இந்தியப் பொலிஸ் கோஷ்டியொன்று அதிகார பூர்வமற்ற முறையில் நேபாளத் தலைநகர் காட்மண்டுவுக்குள் புகுந்து இரு முன்னாள் அரச அதிகாரிகளின் வீடுகளில் திடீர் சோதனை நடத்திய விடயம் தொடர்பாக ஆராய இந்திய அரசு ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது

அமைச்சரவையின் செயலாளரான பல்ராம் மல்லா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. இச்சம்பவத்தையடுத்து இந்திய நேபாள உறவில் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது தெரிந்ததே. இச்சம்பவம் குறித்து ஏற்கனவே இந்திய அரசு நேபாளத்திடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

## பொலிஸ் பாதுகாப்பு

காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் சிங்காரத்திற்கு பாதுகாப்பு வழங்கும்படி தாம் பொலிசாரைப் பணித்திருப்பதாக தமிழக சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா தமிழக சட்ட சபையில் பேசும் போது தெரிவித்தார்.

சிங்காரம் மீது நடந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறிலங்கா அரசுக்கு எதிராக கொத்தலாவல வழக்கு தாக்கல்

## பதவிநீக்கம் செய்தமை மனித உரிமைமீறல்

(கொழும்பு)

லெப். கேணல் ஜயந்த கொத்தலாவல தமது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டிருப்பதாகக் கூறி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அரசியலமைப்பின் 12 (1) மற்றும் 13 (5) பிரிவுகளின் கீழ் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும் எந்த இராணுவ விசாரணைக்கும் உட்படுத்தப்படாமல் தாம் இராணுவத்திலிருந்து இடை நிறுத்தப்பட்டதன் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாகவும் அவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம் மனுவின் மீது மூன்று நீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்றம் பெரும் விசாரணை நடத்தவுள்ளது.

அத்துடன் அமெரிக்காவில் பயிற்சிக்கு உட்பட்டிருந்த போது திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டதான குற்றச்சாட்டில்தான் நிரபராதி எனவும் அம் மனுவில் விபரமாக குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவிலோ அல்லது சிறிலங்காவிலோ தான் இராணுவ மன்றின் விசாரணைக்கு உள்ளாக்கப்படவில்லை எனவும் இந் நிலையில் தாம் பதவி நீக்கப்பட்டிருப்பது ஒரு அடிப்படை உரிமை மீறல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

பாடசாலை மாணவர் விபரம்சேகரிப்பு

# கேள்விக் கொத்தில் பரம்பரை பற்றி வினாக்கள்

(நல்லூர்)

வலயம் இரண்டு கோப்பாய்ப் பாடசாலைகளில் மாணவர் விபரம் சேகரிக்கும் கேள்விக் கொத்தொன்றில் பரம்பரை பற்றிய விபரங்களும் கேட்கப்பட்டுள்ளன. கோப்பாய்க் கோட்டக் கல்வி அலுவலகம் மாணவர் சுய விபர அறிக்கை படிவம் 'அ' வில் பரம்பரையாகக் குடும்ப நிலை, தொழில் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய கேள்விகளைக் கேட்டுள்ளது. இந்தப் படிவங்கள் கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்குப் ''பரம்பரை'' பற்றிய விபரங்களை எவ்வாறு மாணவர்களிடமிருந்து சேகரிப்பது என்பது குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும், வகுப்பாசிரியர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட படிவங்கள் கல்வி வலயம் இரண்டு-கோப்பாய்க் கோட்டத்தைத் தவிர வேறு கோட்டங்களிலோ அல்லது கல்வி வலயம் ஒன்றிலோ விநியோகிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## உதைபந்தாட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (86)

## அறிவியல் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடத்தும் அறிவியற் கருத்தரங்கின் இரண்டாது அமர்வு இன்று பிற்பகல் நான்கு மணியளவில் விடுதலைப்புலிகள் மாணவரமைப்பின் அறிவியற் கழக மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் ''அறிவியலின் வளர்ச்சியும், சமூக மாறுதல்களும்'' என்னும் பொருள் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி உரைநிகழ்த்தவுள்ளார்.

# புகையிரதகடவை ஊழியரின் சம்பளம் வழங்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

பல மாதகாலமாக வழங்கப்படாதிருந்த யாழ் மாவட்ட புகையிரதக் கடவை ஊழியர்களுக்கான ஊதியத்தை வழங்க அமைச்சு அங்கீகாரமளித்துள்ளது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த புகையிரதக் கடவை ஊழியர்களுக்கு பலமாதகாலமாக ஊதியம் வழங்கப்படாததால் இவ் ஊழியர்கள் ஊர்வலமொன்றை நடாத்தி யாழ் அரசஅதிபரிடம் தமக்கு ஊதியம் வழங்கப்படாதது குறித்த தமது கோரிக்கையை எழுத்துமூலம் கையளித்திருந்தது தெரிந்ததே. இதேவேளை இவர்களது ஊதியம் வழங்கப்படாத காலம் முதல் இதுவரை வழங்கப்படுமா என்பது குறித்த விளக்கம் எதுவும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (சி)

# அன்னை பூபதி நினைவாக சிரமதானப் பணிகள்

அன்னை பூபதி நினைவு தினத்தையிட்டு யாழ் வட்டப் பகுதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து காக்கைதீவு சந்தி வரை அராலி வீதியை துப்புரவு செய்யும் பெருமளவிலான சிரமதான நிகழ்ச்சி யாழ். வட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த 8-ம் திகதி தொடக்கம் இடம் பெற்றது இச் சிரமதானம் மூன்றுதினங்கள் நடைபெற்றன இதில் சனசமூக நிலையங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்களும், பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கி வந்தனர்.

# விரைவோட்ட பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு

பாடசாலை மற்றும் கழகங்களைச் சேர்ந்த வீரர்களுக்கான விரைவோட்ட பயிற்சி முகாம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 மணிமுதல் நண்பகல் 1 00 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் பயிற்சி முகாமை தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் நடத்துவர்.

இந்த இலவசப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வரும் வீரர்கள் களத்தில் செயல்முறை நிகழ்வுகளில் பங்குபற்றக் கூடியதாக உடைகள் மற்றும் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களுடன் வருகை தருமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தின் பிரபல முன்னாள் மெய்வல்லுநர் வீரர் திரு. பொ. பஞ்சலிங்கம் பயிற்சி முகாமை ஆரம்பித்து வைப்பார்.

# யானைகள் தொல்லையால் ஏறாவூரில் ஐவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் பதுளை வீதியை அண்டிய பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லைகளால் பொது மக்களும், விவசாயிகளும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது. இதுவரையில் சுமார் 1500 ஏக்கர் நெல் வயல் நாசமாக்கப்பட்டிருப்பதாகவும், ஐந்து பேர் உயிரிழந்திருப்பதாகவும், ஐம்பது வீடுகள் வரையில் சேதமாக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் பெருமளவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பின்னரும்கூட இப்பகுதி மக்கள் தம் வயல்களில் விளைந்த நெல்லை வீட்டுக்கு எடுத்துவருவதற்கு படையினரின் அனுமதி பெறுவதற்கு பெரும் சிரமப்படுவதாகவும், காட்டு யானைகளிடமிருந்து வயல் பாதுகாப்புக்கு ரோச் லைற்றுகளை பயன்படுத்துவதற்கு பற்றறி பெற முடியாமல் அவதியுறுவதாகவும் தெரிய வருகிறது.

---

## சீனாவிடம்

மாறு கடற்படைத்தளபதி கேட்டுக் கொள்ளப்பட்டார் அப்போதுதான் கடற்படைத் தளபதி பதவி துறப்பது பற்றிப் பிரஸ்தாபித்தார்.

இந்த ஒப்பந்தம் ஏற்படுவதில் சிக்கல்கள் ஏற்பட்டால் அது இரு நாட்டு உறவுகளையும் பாதிப்பதாக இருக்கும் என்பதுடன், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் உத்தேச சீன விஜயத்துக்கும் குந்தகம் ஏற்படுத்தும் எனக் கவலை கொண்டு பீஜிங்கில் இருக்கும் சிறிலங்காவிற்கான தூதுவர் சிவிரமாகினார்.

இவ் விடயம் நிதியமைச்சு செயலர் பாலசுரலிங்கத்திற்கு சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்க நாட்டில் இல்லாத நிலையிலும் பாலசுரலிங்கம் தமது சொந்த பொறுப்பில் நிதியை ஒதுக்க முன்வந்தார்.

# க.பொ.த. (சா/த) பரீட்சை நகர பாடசாலை முடிவுகள்

| பாடசாலை | பெறுபேறு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|---|
| யாழ். இந்துக்கல்லூரி | 7டி - 7<br>7டி 1சி - 3<br>7டி 1எஸ் - 5 | 183 | 178 |
| சென் யோன்ஸ் | 7டி - 14<br>6டி - 8<br>5டி - 12 | 118 | 107 |
| யாழ். மத்தியகல்லூரி | 5டி 1சி 2எஸ் - 1<br>5டி 1சி<br>4டி 3சி 1எஸ் - 5 | 226 | 117 |
| சென் பற்றிக்ஸ் | 7டி - 1<br>6டி - 9<br>5டி - 10 | 192 | 123 |
| வேம்படி மகளிர் கல்லூரி | 7டி - 2<br>6டி 2சி - 7<br>5டி - 22 | 163 | 154 |
| சுண்டுக்குழி | 7டி - 11<br>6டி - 10<br>5டி - 9 | 92 | 87 |
| இந்து மகளிர் கல்லூரி | 7டி - 8<br>6டி - 5<br>5டி - 3 | 235 | 211 |
| வைத்தீஸ்வர கல்லூரி | 3டி 2சி 3எஸ் - 1 | 130 | 25 |

### பச்சிலைப்பள்ளி

கிளிநொச்சி பளை மகாவித்தியாலயம் உட்பட பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் ஐந்து பாடசாலைகளின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கிடைத்துள்ளன. இப் பாடசாலைகளிலிருந்து 225 பேர் பரீட்சைக்கு தோற்றி 45 பேர் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு செல்லக்கூடிய பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

பளை மகாவித்தியாலயத்தில் 35 பேரும், மாசார் பாடசாலையில் 2 பேரும், இயக்கச்சியில் 2 பேரும், வேம்படுகேணியில் 2 பேரும், கிளாலியில் 2 பேரும் உயர்தர வகுப்பிற்கு செல்லக் கூடிய பெறுபேறுகளை பெற்றுள்ளனர். (86)

# மேலும் சில பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டன.

பாடசாலைப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதுவரை எமக்கு கிடைத்த தகவல்களின்படி பாடசாலை ரீதியான முன்னணிப் பெறுபேறுகள் பின்வருமாறு:

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி - 4டி, 3சி, 1எஸ்

கொக்குவில் இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி - 1டி, 3சி, 2எஸ்

கிளி / பளை மகா வித்தியாலயம் - 5டி, 1சி

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்) 5டி, 2சி

மகாஜனக் கல்லூரி:- 6டி 2சி - 1, 6டி 1சி 1எஸ் - 1, 6டி 1சி - 1, 6டி 2எஸ் - 1, 5டி 2சி 1எஸ் - 1, 5டி, 1சி 1எஸ் - 1, 5டி 2சி - 1, 4டி 3சி - 2, 4டி 2சி 2எஸ் - 2, 4டி 2சி 1எஸ் - 1

யூனியன் கல்லூரி:- 6டி 1சி - 2, 5டி 2சி 1எஸ் - 1, 5டி 1சி 2எஸ் - 1, 5டி 1சி 1எஸ் - 1, 4டி 2சி 2எஸ் - 1, 4டி 3சி 1எஸ் - 1, 4டி 3சி - 2, 4டி 2சி 1எஸ் - 1, 3டி 3சி 1எஸ் - 5, 3டி 4சி 1எஸ் - 1, 3டி 3சி 2எஸ் - 1

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி:- 6டி 2சி - 1, 4டி 3சி - 2, 3டி 2சி - 3, 2டி 4சி 7

---

ஆதன மதிப்பீட்டாளர் / புள்ளி விபரவியலாளர்களுக்கான

## வேலை வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் ஆதனம் மதிப்பீடு செய்வதற்கும் ஆதன புள்ளி விபரங்கள் சேகரிப்பதற்கும் இது தொடர்பான பட்டறிவுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு நாள் 10.04.94 விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி வி. இல. 320 / மே / பா ஈழநாதம் மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு:- கடித மேலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்ப இலக்

# கப்பல் நோயாளர் கவனத்திற்கு

கப்பல் மூலம் நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, மற்றும் தண்ணீருடன் காலை எட்டு மணி

# மரண அறிவித்தல்கள்

7951 யாழ் மாவட்டம்
நிதித்துறை.

## தொழில் நுட்பக் கல்லூரி

### மண்ணெய் விநியோகம்

எதிர்வரும் நாட்களில் கீழ் வருவோருக்கு மண்ணெய் விநியோகிக்கப்படும்;

வெள்ளி(08-04-94), ஞாயிறு (10-04-94) காலை 10 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை.

(1) 93/94 இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் 4லீ.

(2) சென்றதடவை மண்ணெய்பெறாதவர்கள் 2லீ.

மாணவர் அவை

(7944)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 05-04-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1549

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

26-7217, 42-3239, 26-2421, 26-6264, 24-7941, 26-6029, 26-6842, 24-2288, 26-3146, 41-8068, 28-0523, 24-5461, 24-6280, 27-0849, 41-2509, 26-8497, 42-1019, 26-2827, 24-4153, 42-3615, 24-6439, 24 4367, 24-4390;

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

27-2089, 27-8959, 27-3429, 26-0767, 42-8108, 41-9165, 24-6972' 24,3594, 42-3267, 28-3489, 26-0423, 28-0425, 41-9111, 26-2668, 27-4630;

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்;

## நாட்டரிசி விலை நிர்ணயம்

நாட்டரிசிக்கு சந்தை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் மேலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படும் நாட்டரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை கிலோ ஒன்றுக்கு 29 ரூபாவாக இருக்கும் எனவும், வெளிச் சந்தையில் கிலோ ரூ: 29.50 சதமாக இருக்குமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு

களின் நலன்களைப் பேணுவது குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம் இதனால்தான் தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம்; வெகு விரைவில் நல்லதொரு முடிவை எட்டுவோம் என்று நம்புகிறோம் எனவும் தெரிவித்தார்.

ஹெந்தலவில்

சேர்ந்தவர்களது ஏப்ரல்மாத வவுச்சர்களும் எடுத்துவரப்பட்டன; அத்துடன் ஆயிரத்துக்குமேற்பட்ட தேசிய அடையாள அட்டைகளும் வந்தன. இவை அனைத்தும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலகங்களைச் சென்றடைந்தன. (யோ)

## தில்லைநாதன் ஐயர் குலேந்திரன்

### (குலன்)

(யாழ் மத்திய கல்லூரி மாணவன்)

குலேந்திரன் அவர்கள் 04-04-94 அன்று அகால மரணமாகிவிட்டார்

இவர் தில்லைநாதன் ஐயர் (சப்பறம், மணவறை, பந்தல், சாத்துப்படி அமைப்பாளர்) - சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்பு மகனும் ரஜீந்திரன், அழகேசன், விமலேந்திரன், சுரேந்திரன், கேசவன், இந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 06-04-94-ல் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 9 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

தகவல்:

திரு. ச. தில்லைநாதன் ஐயர்

38, அரசடிப் பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்; (7952)

## திருமதி அன்ரனியா அந்தோனிப்பிள்ளை

5-04 94-ல் திருமதி அன்ரனியா அந்தோனிப்பிள்ளை காலமாகிவிட்டார்: இவர் காலம்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் எட்மன்கைமர், எற்னா, நிர்மலா, சிந்தியா, றெஜி செபஸ்ரியன் ஆகியோரின் அருமைத் தாயாரும் காலம்சென்ற செல்வநாயகம், பிரபாகரன், யோன்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருசாந்தி, அனுசாந்தி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் J. P. A: பிலிப்ஸ் காலம் சென்ற வைத்திய கலாநிதி J. P. C. பிலிப்ஸ் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்;

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று புதன் (6-4-94) பிற்பகல் 3.30மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி செல்வநாயகம்

இல. 114 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7947)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி - 3டி, 4கி

சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 5டி

வேரணி மகாவித்தியாலயம் 4டி, 3கி

வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்தியமகா வித்தியாலயம் - 4டி, 3கி

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயம் - 3டி, 2கி, 2எஸ்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 4டி, 3சி

2சி - 3, 2டி 4சி 7

அத்தியார் இந்துக்கல்லூரி: 6டி 1கி 1எஸ் - 1, 3டி 1கி 1எஸ் - 1, 2டி 3கி 2எஸ் - 1, 2டி 4சி 1எஸ் - 1, 2டி 3கி 1எஸ் - 2

சாதனா வித்தியாலயம்:- 4டி 2கி 2எஸ் - 1, 3டி 2கி 1எஸ் - 1, 2டி 4சி 2எஸ் - 1, 2டி 4சி 1எஸ் - 1, 2டி 3சி 1எஸ் - 1

உடுவில் மகளிர் கல்லூரி:- 7டி - 3, 6டி - 4

இவற்றில் அழகியல்கலை முடிவுகள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தாக்குதலுக்கு பலியான மாணவிக்கு சிறந்த சித்தி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் க. பொ. த சாதாரண பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவி ஒருவர் இன்று உயிருடன் இல்லை, இவரது பெறுபேறுகள் நேற்று இப்பாடசாலைக்கு எடுத்து வரப்பட்ட போது அம் மாணவியின் பெறுபேறுகளைப் பார்த்த பலரது நெஞ்சங்கள் சோகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டன.

தனது பரீட்சை பெறுபேறுகள் வெளிவருவதற்கு முன்னர் இவரது உயிர் ஸ்ரீலங்காப் படையினரின் தாக்குதலினால் பறிக்கப்பட்டு விட்டது;

சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த குலேந்திராணி கோபாலகுலசிங்கம் என்ற மாணவியே இவ்வாறு சாவு கொள்ளப்பட்ட மாணவியாவார்.

இவர் மேற்படி பரீட்சையில் இரண்டு விசேட சித்திகளையும் இரண்டு திறமைச் சித்திகளையும், நான்கு சாதாரண சித்திகளையும் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர்தரப் பரீட்சையின் மொத்தப்புள்ளிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

கடந்தஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மொத்தப்புள்ளிகள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன. கல்வித் திணைக்களம் இவற்றை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு

அனுப்பி வைத்துள்ளது.

25 வருடங்களில்

இதனைத்தவிர தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் மற்றும் பானங்கள் என்பனவும் புற்றுநோயை தோற்றுவிக்கும் காரணிகளென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.